Wondershare
PDFelement



# வெற்றிக்கு வழி மாதிரி பொதுத்தேர்வு வினாத்தாள் - 1

**நேரம் : 15 நிமிடம் + 3 மணி** **மதிப்பெண்கள் : 100**

## பகுதி – I (மதிப்பெண்கள்: 15)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 15 x 1 = 15**

1. ஹிப்பாலஸ் பருவக்காற்றின் வழியில் __________க் கடல் வணிகம் பெருகிற்று.
   அ) யவன ஆ) கிரேக்க இ) உலக ஈ) ரோம
2. 'கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது' – தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே –
   அ) பாடிய; கேட்டவர் ஆ) பாடல்; பாடிய இ) கேட்டவர்; பாடிய ஈ) பாடல்; கேட்டவர்
3. உரைநடையும் கவிதையும் இணைந்து யாப்புக்கட்டுகள் உருவாக்கப்படும் கவிதை வடிவம் ________.
   அ) வசனகவிதை ஆ) புதுக்கவிதை இ) மரபுக்கவிதை ஈ) ஹைக்கூ
4. சொல்லேர் உழவனாகிய மோசிகீரனாருக்குக் கவரிவீசிய வில்லேருழவனின் பெயர் ___________.
   அ) பாண்டியன் நெடுஞ்செழியன் ஆ) பெருஞ்சேரல் இரும்பொறை
   இ) கூன்பாண்டியன் ஈ) சேரலாதன்
5. 'வீட்டைத் துடைத்துச் சாயம் அடித்தல்' இவ்வடி குறிப்பிடுவது
   அ) காலம் மாறுவதை ஆ) வீட்டைத் துடைப்பதை
   இ) இடையறாது அறப்பணி செய்தலை ஈ) வண்ணம் பூசுவதை
6. வாய்மையே மழைநீராகி - இத்தொடரில் வெளிப்படும் அணி
   அ) உவமை ஆ) தற்குறிப்பேற்றம் இ) உருவகம் ஈ) தீவகம்
7. 'வாழ்விக்க வந்த காந்தி'– எந்த மொழியின் தமிழாக்கம்?
   அ) ஜெர்மன் ஆ) ஆங்கிலம் இ) இலத்தீன் ஈ) பிரெஞ்சு
8. தரவு அறிவியலாளர்களின் தேவை கூடியதின் காரணம்
   அ) செயற்கை நுண்ணறிவு ஆ) வானவியல்
   இ) கணித அறிவு ஈ) பகுத்தறிவு
9. 'மொகு சாஸ்ட்டு' என்பதன் பொருள்
   அ) சண்டை அவசியம் வேண்டும் ஆ) போருக்கு தயாராக வேண்டும்
   இ) விடைதர அவகாசம் வேண்டும் ஈ) ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்
10. "சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி" என்னும் அடியில் பாக்கம் என்பது -
    அ) புத்தூர் ஆ) மூதூர் இ) பேரூர் ஈ) சிற்றூர்
11. கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன?
    அ) நல்ல உள்ளம் உடையவர்கள் இல்லாததால் ஆ) ஊரில் விளைச்சல் இல்லாததால்
    இ) அரசன் கொடுங்கோல் ஆட்சிபுரிவதால் ஈ) அங்கு வறுமை இல்லாததால்

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.**

*நும்இல் போல நில்லாது புக்கு,*
*கிழவிர் போலக் கேளாது கெழீஇ*
*சேட் புலம்பு அகல இனிய கூறி*
*பரூஉக்குறை பொழிந்த நெய்க்கண் வேவையொடு*
*குரூஉக்கண் இறடிப் பொம்மல் பெறுகுவிர்.*

12. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல்
    அ) பிள்ளைத்தமிழ் ஆ) திருவெம்பாவை இ) தேவாரம் ஈ) மலைபடுகடாம்
13. கெழீஇ என்பது ___________ அளபெடை.
    அ) செய்யுளிசை ஆ) உயிர் இ) சொல்லிசை ஈ) இன்னிசை
14. படுகர் என்ற சொல்லின் பொருள் என்ன?
    அ) மேடு ஆ) பள்ளம் இ) உயரம் ஈ) அகலம்
15. இப்பாடலின் ஆசிரியர்
    அ) அம்மூவனார் ஆ) திருமங்கையாழ்வார் இ) நம்மாழ்வார் ஈ) பெருங்கௌசிகனார்

Way to Success
Wondershare PDFelement

Wondershare PDFelement


**பகுதி – II (மதிப்பெண்கள்: 18)**

**பிரிவு – 1**

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.** **4 x 2 = 8**

**21-ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

16. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.
    அ) தப்பாட்டம் நிகழ்த்தப்படும் சூழலுக்கேற்ப பல்வேறு ஆட்டக்கூறுகளைக் கொண்டுள்ளது.
    ஆ) ஒயிலாட்டத்தில் தோலால் கட்டப்பட்ட குடம், தவில், சிங்கி, டோலக், தப்பு போன்ற இசைக்கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன.
17. தமிழின் பெருமை எதனைப் போன்று முழங்குவதாக பெருஞ்சித்திரனார் கூறுகின்றார்?
18. 'வாட்சன்' குறிப்பு வரைக.
19. 'மோப்பக்குழையும் அனிச்சம்' - இத்தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக.
20. 'தேம்பாவணி' என்ற சொல்லுக்கு இருவகையாகப் பொருள்கொள்ளுவதைக் காட்டுக.
21. ***செயல்*** – என முடியும் திருக்குறளை எழுதுக.

**பிரிவு – 2**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.** **5 x 2 = 10**

22. குறிப்புகளைக் கொண்டு வினாவிலேயே விடை இருப்பது போன்று வினாத்தொடர்கள் அமைக்க.
    அ) குறளின்பம் ஆ) சுவைக்காக இளநீர்
23. இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக.
    அ) சிலை - சீலை ஆ) மடு - மாடு
24. ஊர்ப்பெயர்களின் மரூஉவை எழுதுக.
    அ) புதுக்கோட்டை ஆ) உதகமண்டலம்
25. இரண்டு தட்டுகளிலும் ஒரே ஒரு பிஸ்கட்டைப் போட்டு இதே எக்ஸ்பெரிமெண்ட்டை ரிப்பீட் செய்து ஆன்சரைக் கண்டுபிடியுங்கள்! ஆல் தி பெஸ்ட்! – உரையாடலில் உள்ள பேச்சு வழக்கினை எழுத்து வழக்காக மாற்றுக.
26. தொகைச் சொற்களைப் பிரித்து எழுதி, தமிழ் எண்ணுரு தருக.
    அ) மூவேந்தர் ஆ) அறுசுவை
27. குறள் வெண்பாவின் இலக்கணம் என்ன?
28. ***மாறுவர்*** - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

**பகுதி – III (மதிப்பெண்கள்: 18)**

**பிரிவு – 1**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** **2 x 3 = 6**

29. பொருநராற்றுப்படையில் விருந்தினரை எவ்வாறு வழியனுப்பி வைத்தனர்?
30. மொழிபெயர்ப்பைப் 'பயன்கலை' என்று கூறப்படக் காரணங்கள் எவை?
31. **உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

பருப்பொருள் சிதறும்படியாகப் பல ஊழிக் காலங்கள் கடந்து சென்றன. புவி உருவான போது நெருப்புப் பந்துபோல் விளங்கிய ஊழிக்காலம் தோன்றியது. பின்னர்ப் புவி குளிரும் படியாகத் தொடர்ந்து மழை பொழிந்த ஊழிக் காலம் கடந்தது. அவ்வாறு தொடர்ந்து பெய்த மழையால் புவி வெள்ளத்தில் மூழ்கியது. இப்படி மீண்டும் மீண்டும் சிறப்பாகிய ஆற்றல் மிகுந்து செறிந்து திரண்டு இப்படியாக (வெள்ளத்தில் மூழ்குதல்) நடந்த இந்தப் பெரிய உலகத்தில், உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாகிய உள்ளீடு தோன்றியது. உயிர்கள் தோன்றி நிலைபெறும் படியாக இப்பெரிய புவியில் ஊழிக்காலம் கடந்தது.

1. பத்தியிலுள்ள அடுக்குத் தொடர்களை எடுத்து எழுதுக.
2. புவி ஏன் வெள்ளத்தில் மூழ்கியது?
3. பெய்த மழை - இத்தொடரை வினைத்தொகையாக மாற்றுக.

Wondershare PDFelement

**பிரிவு – 2**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** **2 x 3 = 6**

**34-ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

32. ''தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்'' - இடஞ்சுட்டி பொருள் விளக்குக.

33. பாரதியார் காற்றே வா! பாடலில் காற்றை எங்ஙனம் புகழ்ந்து போற்றிப் பாடுகிறார்?

34. **அடிபிறழாமல் எழுதுக.**

"தண்டலை" எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடல்

**(அல்லது)**

"செம்பொ னடிச்சிறு" எனத் தொடங்கும் முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் பாடல்

**பிரிவு – 3**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** **2 x 3 = 6**

35. *முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை*
*இன்மை புகுத்தி விடும்* - இக்குறட்பாவில் அமைந்துள்ள பொருள்கோளின் வகையைச் சுட்டி விளக்குக.

36. *"ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்*
*தாழா துஞற்று பவர்"* - இக்குறட்பாவிற்கு அலகிட்டு வாய்பாடு தருக.

37. நிரல் நிறை அணி என்றால் என்ன? சான்றுடன் விளக்குக.

**பகுதி – IV (மதிப்பெண்கள்: 25)**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** **5 x 5 = 25**

38. அ) இரண்டாம் இராசராச சோழன் மெய்க்கீர்த்தியில் அமைந்துள்ள கருத்துகளை விவரிக்க.

**(அல்லது)**


ஆ) சரயு ஆறு, மருத நிலம், கோசல நாடு - இவற்றைக் கம்பன் வழி நின்று வருணிக்க.

39. அ) நீங்கள் விரும்பி படித்த நூல் ஒன்றின் சிறப்புகளைக் கூறி, உங்கள் நண்பரையும் அந்நூலினைப் படிக்குமாறுப் பரிந்துரைத்து நண்பருக்குக் கடிதம் எழுதுக.

**(அல்லது)**

ஆ) உங்கள் பள்ளியில் நடைபெறும் நாட்டுநலப்பணித்திட்ட முகாமின் தொடக்க விழாவில் மாணவர்களுக்கு வாழ்த்துரை வழங்க உரை ஒன்றை உருவாக்கித் தருக.

40. படம் உணர்த்தும் கருத்தை நயமுற ஐந்து தொடர்களில் எழுதுக.



41. கண்ணதாசன் என்பவர் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினராக சேர விரும்புகிறார். அவருடைய பிறந்த தேதி 08.05.2002. தந்தை பெயர் விஜயன். இரத்த வகை 'O' பாசிட்டிவ், உயரம் 176 செ.மீ. க.எண்.34/356, பாலக்கரை, திருச்சி என்ற முகவரியில் பெற்றோருடன் வசித்து வருகிறார். இறுதியாக முடித்த வகுப்பு 12-ஆம் வகுப்பு. கபடி விளையாட்டில் சேர விரும்புகிறார். தேர்வர் தன்னை கண்ணதாசனாக பாவித்து இணைக்கப்பட்டுள்ள படிவங்களில் உரிய படிவத்தினை தேர்ந்தெடுத்து நிரப்பவும்.

42. அ) நாம் ஒவ்வொரு சூழலிலும் ஒருவருக்கு ஒருவர் உதவி செய்தபடி இருக்கிறோம்.
நீங்கள் செய்த, பார்த்த உதவிகளால் எய்திய மனநிலை குறித்து எழுதுக.

……………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………..

**(அல்லது)**

Way to Success

Wondershare PDFelement



ஆ) **மொழிபெயர்க்க.**

*Puzzled by the beggar's behaviour, the Emperor summoned him to his presence and asked him, "What have you done with the loaf of bread that I had sent you lately?" The man replied, "I sold it to my friend, because it was heavy and did not seem well baked" Then the Emperor said, "Truly he whom God helps is helped indeed", and turned the beggar out of his palace.*

**குறிப்பு : செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா.**

**உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

இன்றைக்குப் பல்வேறு துறைகளின் வளர்ச்சிக்கு மொழிபெயர்ப்பு தேவைப்படுகிறது. மொழிபெயர்ப்பு இல்லை எனில் உலகை எல்லாம் வலையாகப் பிடித்திருக்கிற ஊடகத்தின் வளர்ச்சி இல்லை. தோலைக்காட்சி, வானொலி, திரைப்படம், இதழ்கள் போன்ற ஊடகங்கள் மொழிபெயர்ப்பால்தான் வளர்ச்சி பெறுகின்றன. விளம்பர மொழிக்கு மொழிபெயர்ப்பு தேவைப்படுகிறது. திரைப்படங்கள் தொலைக்காட்சித் தொடர்கள் ஆகியன வேற்று மொழிமாற்றம் செய்யப்பட்டு அனைத்து மொழி பேசும் மக்களையும் அடைகின்றன. இதனால் புதுவகையான சிந்தனைகள் மொழிக்கூறுகள் பரவுகின்றன.

(i) இன்றைக்குப் பல்வேறு துறைகளின் வளர்ச்சிக்கு தேவைப்படுவது எது?

(ii) மொழிபெயர்ப்பால் வளர்ச்சி பெறுவன எவை?

(iii) விளம்பர மொழிக்கு தேவைப்படுவது எது?

## பகுதி – V (மதிப்பெண்கள்: 24)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க** **3 x 8 = 24**

43. அ) உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.

**(அல்லது)**

ஆ) மொழிபெயர்ப்பின் பயன்களையும் அதன் இன்றையத் தேவையினையும் விவரித்து எழுதுக.

44. அ) தமிழ், சொல் வளமுடையதென்றும் தமிழ்நாடு பொருள் வளமுடையதென்றும் தெளிவாக விளங்குவதற்கான காரணங்கள் சிலவற்றைத் தொகுத்தெழுதுக.

**(அல்லது)**

ஆ) புயலிலே ஒரு தோணி கதையில் இடம்பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத் தொடர்களும் ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில், தோணி படும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன?

45. அ) கருந்துளை சார்ந்த செய்தியை அறிவியல் இதழ் ஒன்றிற்குக் குறுங்கட்டுரையாக எழுதுக.

**(அல்லது)**

ஆ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதி, தலைப்பு ஒன்று தருக.

*முன்னுரை – தமிழகம் தந்த தவப்புதல்வர் – நாட்டுப் பற்று – மொழிப்பற்று – பொதுவாழ்வில் தூய்மை – எளிமை – மக்கள் பணியே மகத்தான பணி – முடிவுரை.*

Way to Success

Wondershare PDFelement



# வெற்றிக்கு வழி மாதிரி பொதுத்தேர்வு வினாத்தாள் - 2

நேரம் : 15 நிமிடம் + 3 மணி — மதிப்பெண்கள் : 100

## பகுதி – I (மதிப்பெண்கள்: 15)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **15 x 1 = 15**

1. 'இரவு வேளையிலும் விருந்தினர் வந்தார்கள் என்றால் மகிழ்ச்சியுடன் வரவேற்று விருந்தளித்தனர் என்கிறது நற்றிணை' இச்செய்தி உணர்த்தும் விருந்து போற்றிய நிலை.
   அ) இன்மையிலும் விருந்து ஆ) அல்லிலும் விருந்து
   இ) நிலத்திற்கேற்ற விருந்து ஈ) உற்றாரின் விருந்து
2. தமிழில் கேலிச்சித்திரம் - கருத்துப்படம் போன்றவற்றை முதலில் உருவாக்கியவர்
   அ) சுரதா ஆ) பாரதியார் இ) வால்ட்டிஸ்னி ஈ) பாரதிதாசன்
3. வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர்வகை -
   அ) குலை வகை ஆ) மணி வகை இ) கொழுந்து வகை ஈ) இலை வகை
4. பரிபாடல் அடியில் 'விசும்பும் இசையும்' என்னும் தொடர் எதனைக் குறிக்கிறது?
   அ) வானத்தையும் பாட்டையும் ஆ) வானத்தையும் புகழையும்
   இ) வானத்தையும் பூமியையும் ஈ) வானத்தையும் பேரொலியையும்
5. 'மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்' – என்றவரி இடம்பெறும் செப்பேடு?
   அ) வேள்வி குடி செப்பேடு ஆ) சின்னமனூர்ச் செப்பேடு
   இ) பராந்தகன் செப்பேடு ஈ) குடமியான்மலை செப்பேடு
6. 'ஆலத்துமெல குவளை குளத்துள
   வாளின் நெடிய குரங்கு'- இக்குறளில் இடம்பெறும் பொருள்கோள்?
   அ) கொண்டுகூட்டு ஆ) நிரல்நிறை இ) ஆற்றுநீர் ஈ) தாப்பிசை
7. குழந்தையின் தலை அசைவைப் பாடும் பருவம்________
   அ) செங்கீரைப் பருவம் ஆ) காப்புப் பருவம் இ) சப்பாணிப் பருவம் ஈ) அம்புலிப் பருவம்
8. அறத்தின் அடிப்படையில் ஆராய்ந்து தண்டனை வழங்க வேண்டுமென வற்புறுத்தியவர்
   அ) பரணர் ஆ) முடத்தாமக் கண்ணியார்
   இ) மோசிகீரனார் ஈ) ஊன்பொதிப் பசுங்குடையார்
9. இருநாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம்_________
   அ) நாட்டைக் கைப்பற்றல் ஆ) ஆநிரை கவர்தல்
   இ) வலிமையை நிலைநாட்டல் ஈ) கோட்டையை முற்றுகையிடல்
10. ஜெயகாந்தன் தன் இலக்கியப் பயணத்தில் முன்னோடியாகக் கொண்டவர்
    அ) பாரதிதாசன் ஆ) பாரதியார் இ) பட்டுக்கோட்டையர் ஈ) மு.வி
11. புகழ்ந்தால் என்னுடல் புல்லரிக்காது,
    இகழ்ந்தால் என் மனம் இறந்துவிடாது – என்ற பாடல் வரியில் அமைந்த முரண் சொல் எது?
    அ) புகழ்ந்தால், இகழ்ந்தால் ஆ) என்உடல், என்மனம்
    இ) புல்லரிக்காது, இறந்துவிடாது ஈ) உடல், மனம்

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.**

*கண்ணுள் வினைஞரும் மண்ணீட்டு ஆளரும்*
*பொன்செய் கொல்லரும் நன்கலம் தருநரும்*
*துன்ன காரரும் தோலின் துன்னரும்*
*கிழியினும் கிடையினும் தொழில்பல பெருக்கிப்*

12. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல்
    அ) கம்பராமாயணம் ஆ) திருவெம்பாவை இ) தேவாரம் ஈ) சிலப்பதிகாரம்
13. கிழி என்ற சொல்லின் பொருள் என்ன?
    அ) துணி ஆ) விண் இ) செல்வம் ஈ) பட்டு
14. ஓவியர் என்ற பொருளுடைய சொல் எது?
    அ) மண்ணீட்டாளர் ஆ) கண்ணுள் வினைஞர் இ) துன்னர் ஈ) நன்கலம்
15. இப்பாடலின் ஆசிரியர்
    ஆ) அம்மூவனார் ஆ) திருமங்கையாழ்வார் இ) கம்பர் ஈ)இளங்கோவடிகள்

Way to Success

Wondershare PDFelement

**பகுதி – II (மதிப்பெண்கள்: 18)**

**பிரிவு – 1**

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.** **4 x 2 = 8**

**21-ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

16. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.

அ) ஒரு நாட்டு வளத்திற்க்கு தக்கபடியே, அந்நாட்டு மக்களின் அறிவொழுக்கங்கள் அமைந்திருக்கும்.

ஆ) சொல்லாராய்ச்சியில் பாவாணரும் வியந்த பெருமகனார் தமிழ்த்திரு இரா. இளங்குமரனார்.

17. ஒரு நாட்டார் அல்லது இனத்தாரின் நாகரிகத்தை அளந்தறிவதற்குச் சிறந்த வழி யாது?

18. 'வேர்டுஸ்மித்' குறிப்பு வரைக.

19. இரண்டாம் இராசராச சோழன் ஆட்சிக் காலத்தில் எவை புலம்புவதாக மெய்க்கீர்த்தி கூறுகிறது?

20. உண்மையான செல்வம் எது என்பதைப் பற்றி நல்வேட்டனாரின் கூற்று என்ன?

21. ***வினை*** – என முடியும் திருக்குறளை எழுதுக.

**பிரிவு – 2**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.** **5 x 2 = 10**

22. சொற்களில் மறைந்துள்ள தொகைகளை அடையாளம் கண்டு தொடரில் அமைக்க.

அ) இன்சொல் ஆ) கீரிபாம்பு

23. இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக.

அ) கொள் - கோள் ஆ) கொடு – கோடு

24. மரபுத் தொடருக்கான பொருளறிந்து தொடரில் அமைத்து எழுதுக.

அ) மனக்கோட்டை ஆ) கண்ணும் கருத்தும்

25. கலைச்சொல் தருக.

அ) Humanism ஆ) Thesis

**குறிப்பு : செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா:**

கூட்டப்பெயர்களை எழுதுக. அ) வாழை ஆ) பசு

26. பால் வழுவமைதி என்றால் என்ன? எடுத்துக்காட்டுத் தருக.

27. பேச்சு வழக்கினை எழுத்து வழக்காக மாற்றுக.

அ) கூகை அகவ கழுதை முழங்கியது. ஆ) அந்த ஊருக்கு கொடக்கூலி எவ்வளவு?

28. ***அறிவேன்*** - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

**பகுதி – III (மதிப்பெண்கள்: 18)**

**பிரிவு – 1**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** **2 x 3 = 6**

29. புத்தகப் பித்தனாக ம.பொ.சி விளங்கியது எங்ஙனம்? அல்லது தான் சேர்த்து வைத்துள்ள சொத்துகளாக ம.பொ.சி கூறுவது எதனை?

30. ஒளிப்படக்கருவியில் செயற்கை நுண்ணறிவின் செயல்பாடு என்ன என்பதை விளக்குக.

31. **உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

தமிழர், போரிலும் அறநெறிகளைப் பின்பற்றினர். போர் அறம் என்பது வீரமற்றோர், புறமுதுகிட்டோர், சிறார், முதியோர் ஆகியோரை எதிர்த்துப் போர் செய்யாமையைக் குறிக்கிறது. போரின் கொடுமையிலிருந்து பசு, பார்ப்பனர், பெண்கள், நோயாளர், புதல்வரைப் பெறாதவர் ஆகியோருக்குத் தீங்கு வராமல் போர் புரிய வேண்டும் என்று ஒரு பாடல் கூறுகிறது. தும்மைவிட வலிமை குறைந்தாரோடு போர் செய்வது கூடாது என்பதை ஆவூர் மூலங்கிழார் குறிப்பிட்டிருக்கிறார்.

1. ஆவூர் மூலங்கிழாரின் போர் அறம் யாது?
2. போர் அறம் என்பது எதனைக் குறிக்கிறது?
3. யாருக்கெல்லாம் தீங்கு வராதவண்ணம் போர் புரிய வேண்டும்?

Way to Success

Wondershare PDFelement



**பிரிவு – 2**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** **2 x 3 = 6**

**34-ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

32. "சித்தாளின் மனச்சுமைகள்
செங்கற்கள் அறியாது" - இடஞ்சுட்டிப் பொருள் தருக.

33. கும்பகருணன் வதைப்படலத்தில் கும்பகருணன் ஆழ்ந்த உறக்கம் எவ்விதம் வெளிப்படுத்துகிறது?

34. **அடிபிறழாமல் எழுதுக.**

"புண்ணியப் புலவீர்" எனத் தொடங்கும் திருவிளையாடற்புராணப் பாடல்

**(அல்லது)**

"அன்னை மொழியே" எனத் தொடங்கும் பெருஞ்சித்திரனாரின் பாடல்

**பிரிவு – 3**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** **2 x 3 = 6**

35. கொண்டு கூட்டுப் பொருள்கோளைச் சான்றுடன் விவரி.

36. *"வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோ
டைந்துடன் மாண்ட தமைச்சு"* - இக்குறட்பாவிற்கு அலகிட்டு வாய்பாடு தருக.

37. தன்மையணி குறித்து எழுதுக.

**பகுதி – IV (மதிப்பெண்கள்: 25)**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** **5 x 5 = 25**

38. அ) நம் முன்னோர் அறிவியல் கருத்துக்களை இயற்கையுடன் இணைந்து கூறுவதாகத் தொடங்குகின்ற பின்வரும் சொற்பொழிவைத் தொடர்ந்து நிறைவு செய்க.

**(அல்லது)**

ஆ) சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.

39. அ) பள்ளித்திடலில் கிடைத்த பணப்பையை உரியவரிடம் ஒப்படைத்ததையும் அதற்குப் பாராட்டுப் பெற்றதையும் பற்றி வெளியூரில் இருக்கும் உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.

**(அல்லது)**

ஆ) உங்கள் பகுதியில் ஏற்பட்ட கடும்புயலில் சாய்ந்துவிட்ட மரங்களை அகற்றியும், பழுதுபட்ட சாலைகளைச் சீரமைத்தும், பழுதடைந்த மின்கம்பங்களைச் சரிசெய்தும் தருமாறு மாநகராட்சி ஆணையருக்குக் கடிதம் ஒன்று எழுதுக.

40. படம் உணர்த்தும் கருத்தை நயமுற ஐந்து தொடர்களில் எழுதுக.



41. தட்டச்சர் பணி வாய்ப்பு வேண்டி தன்விவரப் பட்டியல் ஒன்றை தயார் செய்க.

42. அ) கொன்றை வேந்தன் முதலான பிற்கால அறநூல்களின் பெயர்களை அறிந்து, அவற்றுள் ஏதேனும் ஒரு நூலின் அறக் கருத்துக்களை எடுத்துக்கொண்டு அவை இன்றும் பொருந்தி நிற்பது குறித்துக் கலந்துரையாடல் எழுதுக. ……………………………………………………………………………

**(அல்லது)**

Way to Success

Wondershare PDFelement



ஆ) **மொழிபெயர்க்க :**

1. *Education is what remains after one has forgotten what one has learned in School.*
   ***– Albert Einstein***
2. *Tomorrow is often the busiest day of the week.* ***– Spanish Proverb***
3. *It is during our darkest moments that we must focus to see the light.* ***– Aristotle***
4. *Success is not final, failure is not fatal. It is the courage to continue that counts.*
   ***- Winston Churchill***

**குறிப்பு : செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா.**
**உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

தம் வீட்டிற்கு வரும் விருந்தினரை முகமலர்ச்சியோடு வரவேற்று உண்ண உணவும் இருக்க இடமும் கொடுத்து அன்பு பாராட்டுவதே விருந்தோம்பல். விருந்தினர் என்றால் உறவினர் என்று இக்காலத்தினர் கருதுகின்றனர். உறவினர் வேறு, விருந்தினர் வேறு. முன்பின் அறியாத புதியவர்களுக்கே விருந்தினர் என்று பெயர். ஆதனால்தான் 'விருந்தே புதுமை' என்று தொல்காப்பியர் அன்றே கூறியுள்ளார்.

(i) விருந்தினர் என்போர் யாவர்?

(ii) விருந்து குறித்துத் தொல்காப்பியர் கூறியது யாது?

(iii) இவ்வுரைப்பத்திக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்று தருக.

**பகுதி – V (மதிப்பெண்கள்: 24)**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** **3 x 8 = 24**

43. அ) தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.

**(அல்லது)**

ஆ) 'தமிழகம் பற்றிய கனவு' குறித்து ம.பொ.சி கூறுவதனை நும் பாடப்பகுதி வழி நிறுவுக.

44. அ) வைணவச் சமயப் பெரியார்களில் இராமானுசர் தலை சிறந்தவராகக் கருதப்படக் காரணங்களை விளக்குக.

**(அல்லது)**

ஆ) 'கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே' என்கிறது வெற்றிவேற்கை. மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம், அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச் சுடரை ஏற்றிய கதையைப் பற்றிய உங்களின் கருத்துகளை விவரிக்க.

45. அ) 'விசும்பின் துளியும் பசும்புல் தலையும்' என்னும் கருத்தை அடிப்படையாகக் கொண்டு, குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரை ஒன்று எழுதுக.

***குறிப்புகள்*** *: முன்னுரை - இயற்கையோடு இயைந்து வாழ்வோம் - வானத்து மழைநீரைப் பூமியில் காப்போம் - மழைக்கு ஆதாரமான மரங்களை வளர்ப்போம் - முடிவுரை.*

**(அல்லது)**

ஆ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதி தலைப்பு ஒன்று தருக.

***குறிப்புகள்*** *: முன்னுரை – மனித வாழ்வு அறம் சார்ந்தது - இலக்கியம் காட்டும் அறம் - அறத்தான் வருவதே இன்பம் - முடிவுரை.*

waytosuccess

Wondershare PDFelement


## வெற்றிக்கு வழி மாதிரி பொதுத்தேர்வு வினாத்தாள் - 3

நேரம் : 15 நிமிடம் + 3 மணி மதிப்பெண்கள் : 100

### பகுதி – I (மதிப்பெண்கள்: 15)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 15 x 1 = 15

1. திருமந்திரத்தில் மூச்சுப் பயிற்சியே உடலைப் பாதுகாத்து வாழ்நாளை நீட்டிக்கும் என்று கூறியவர் _____
அ) திருமூலர் ஆ) திருவள்ளுவர் இ) கம்பர் ஈ) ஔவையார்
2. **'பெரிய மீசை'** சிரித்தார் - வண்ணச் சொல்லுக்கான தொகையின் வகை எது?
அ) பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை
இ) அன்மொழித்தொகை ஈ) உம்மைத்தொகை
3. வெற்றிவேற்கை என்றழைக்கப்படும் நூல் ___________.
அ) குறுந்தொகை ஆ) நறுந்தொகை இ) நற்றிணை ஈ) பரிபாடல்
4. "ஒரு மொழியில் உணர்த்தப்பட்டதை வேறொரு மொழியில் வெளியிடுவது மொழிபெயர்ப்பு" என்று கூறியவர் யார்?
அ) மு.கு.ஜகந்நாத ராஜா ஆ) மணவை முஸ்தபா
இ) பாரதி ஈ) அப்புசாமி
5. இடைக்காடனாரின் பாடலை இகழ்ந்தவர்________ இடைகாடனாரிடம் அன்பு வைத்தவர்______
அ) அமைச்சர், மன்னர் ஆ) அமைச்சர், இறைவன்
இ) இறைவன், மன்னன் ஈ) மன்னன், இறைவன்
6. சாகும்போதும் தமிழ்படித்துச் சாக வேண்டும் என்றவர்
அ) பெருஞ்சித்திரனார் ஆ) பாரதியார் இ) பாரதிதாசன் ஈ) சச்சிதானந்தன்
7. பிறருக்கு உதவி செய்தலை ஈழத்துப் பூதன் தேவனாரால் குறிப்பிடப்படும் சொல்
அ) ஈதலின்பம் ஆ) கொடை இ) வரையாதுவழங்குதல் ஈ) உதவியாண்மை
8. குடக்கூத்து என்பது ____________.
அ) மயிலாட்டம் ஆ) ஒயிலாட்டம் இ) கரகாட்டம் ஈ) பொம்மலாட்டம்
9. சிலப்பதிகாரம், மணிமேகலையில் அமையப்பெற்ற ஓசை
அ) அகவலோசை ஆ) துள்ளலோசை இ) தூங்கலோசை ஈ) செப்பலோசை
10. வாய்மையே மழைநீராகி - இத்தொடரில் வெளிப்படும் அணி
அ) உவமை ஆ) தற்குறிப்பேற்றம் இ) உருவகம் ஈ) தீவகம்
11. நெடுவேள் குன்றம் என அழைக்கப்படும் இடம் எது?
அ) சுருளிமலை ஆ) கொல்லிமலை இ) பச்சைமலை ஈ) விராலிமலை

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.**

*வெய்யோனொளி தன்மேனியின் விரிசோதியின் மறையப்*
*பொய்யோவெனு மிடையாளொடு மிளையானொடும் போனான்*
*மையோமர கதமோமறி கடலோமழை முகிலோ*
*ஐயோவிவன் வடிவென்பதொ ரழியாவழ குடையான்.*

12. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல்
அ) பிள்ளைத்தமிழ் ஆ) திருவிளையாடற்புராணம் இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம்
13. இப்பாடல் வரிகள் இடம் பெற்றுள்ள காண்டம் எது?
அ) அயோத்தியா காண்டம் ஆ) கிட்கிந்தா காண்டம் இ) பாலகாண்டம் ஈ) யுத்த காண்டம்
14. வெய்யோன் என்ற சொல்லின் பொருள் என்ன?
அ) திங்கள் ஆ) சூரியன் இ) சந்திரன் ஈ) இரவோன்
15. இப்பாடலின் ஆசிரியர்
அ) கீரந்தையார் ஆ) குமரகுருபரர் இ) இளங்கோவடிகள் ஈ) கம்பர்


waytosuccess

Wondershare PDFelement

**பகுதி – II (மதிப்பெண்கள்: 18)**

**பிரிவு – 1**

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.** **4 x 2 = 8**

**21-ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

16. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.
    அ) மொழிபெயர்ப்பு, மொழியில் புதுக்கூறுகளை உருவாக்கி மொழிவளர்ச்சிக்கு வழிவகுக்கிறது.
    ஆ) தமிழ்நூல்கள், ஆங்கிலம், மலையாளம், தெலுங்கு, இந்தி, கன்னடம், வடமொழி, ரஷ்யமொழி வங்கமொழி, மராத்தி மொழி போன்ற பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.
17. ஜெயகாந்தன், தான் எழுதுவதின் பயனை எவ்வாறு குறிப்பிடுகின்றார்?
18. வருங்காலத்தில் தேவையெனக் கருதுகின்ற செயற்கை நுண்ணறிவு பொதிந்த இரண்டு அறிவியல் கண்டுபிடிப்புகளைக் குறிப்பிடுக.
19. வசன கவிதை குறிப்பு வரைக.
20. பாசவர், வாசவர், பல்நிண விலைஞர், உமணர் - சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர்?
21. ***கண்*** – என முடியும் திருக்குறளை எழுதுக.

**பிரிவு – 2**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.** **5 x 2 = 10**

22. சொற்களில் மறைந்துள்ள தொகைகளை அடையாளம் கண்டு தொடரில் அமைக்க.
    அ) எழுகதிர் ஆ) முத்துப்பல்
23. இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக.
    அ) இயற்கை – செயற்கை ஆ) சிறு – சீறு
24. மரபுத் தொடருக்கான பொருளறிந்து தொடரில் அமைத்து எழுதுக.
    அ) அள்ளி இறைத்தல் ஆ) ஆறப்போடுதல்
25. கலைச்சொல் தருக. அ) Cultural boundaries ஆ) Myth
    **குறிப்பு : செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா:**
    கூட்டப்பெயர்களை எழுதுக. அ) பூ ஆ) நெல்
26. முதனிலைத் தொழிற்பெயரை விளக்குக.
27. உவமையைப் பயன்படுத்திச் சொற்றொடர் உருவாக்குக.
    அ) சிலை மேல் எழுத்து போல ஆ) மழைமுகம் காணாப் பயிர்போல
28. ***பாடுகிறோம்*** - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

**பகுதி – III (மதிப்பெண்கள்: 18)**

**பிரிவு – 1**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** **2 x 3 = 6**

29. மனிதனால் காற்று எவ்வாறு மாசு அடைவதாகக் கூறுகிறது?
30. கலிங்கத்துப்பரணி விருந்தினருக்கு எவ்வாறு உணவிடவேண்டும் என்று கூறுகிறது?
31. **உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

    தேவராட்டம், வானத்துத் தேவர்கள் ஆடிய ஆட்டம் எனப் பொருள் கொள்ளப்படுகிறது. இது ஆண்கள் மட்டுமே ஆடும் ஆட்டம். உறுமி எனப் பொதுவாக அழைக்கப்படும் 'தேவதுந்துபி', தேவராட்டத்திற்குரிய இசைக்கருவி. இந்தக் கலை, வேட்டி கட்டியும் தலையிலும் இடையிலும் சிறுதுணி கட்டியும் கால்களில் சலங்கை அணிந்தும் எளிய ஒப்பனையுடன் நிகழ்த்தப்படுகின்றது.

    1. தேவராட்டத்தின் பொருள் என்ன?
    2. உறுமி என அழைக்கப்படுவது எது?
    3. தேவராட்டக் கலையின் உடைகள் யாவை?

WaytoSuccess

Wondershare PDFelement



**பிரிவு – 2**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. 2 x 3 = 6**

**34-ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

32. 'அன்ன உரை திருச்செவியின் ஊறுபாடு என உறைப்ப அருளின் மூர்த்தி' - இடஞ்சுட்டி பொருள் விளக்குக.
33. சித்தாள், தன் தலையில் செங்கற்களைச் சுமப்பது ஏன்?
34. **அடிபிறழாமல் எழுதுக.**

"தூசும் துகிரும்" எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடல்

**(அல்லது)**

"சிறுதாம்பு" எனத் தொடங்கும் முல்லைப்பாட்டு

**பிரிவு – 3**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும் 2 x 3 = 6**

35. திணை வழுவமைதியைச் சான்றுடன் கூறுக.
36. அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல் - இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு காண்க.
37. *"குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்*
*றுண்டாகச் செய்வான் வினை"* - இதில் பயின்று வந்துள்ள அணியை விளக்குக.

**பகுதி – IV (மதிப்பெண்கள்: 25)**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. 5 x 5 = 25**

38. அ) ஆற்றுப்படுத்தல் என்பது அன்றைக்குப் புலவர்களையும் கலைஞர்களையும் வள்ளல்களை நோக்கி நெறிப்படுத்துவதாக இருந்தது. அது இன்றைய நிலையில் ஒரு வழிகாட்டுதலாக மாறியிருப்பதை விளக்குக.

**(அல்லது)**

ஆ) பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள மெய்க்கீர்த்திப் பாடலின் நயத்தை விளக்குக.

39. அ) ஓட்டுநர் உரிமம் பெற்றுள்ள உறவினருக்கு, முக்கியச் சாலை விதிகளை விளக்கி அவற்றைக் கடைபிடிக்க வலியுறுத்திக் கடிதம் ஒன்று எழுதுக.

**(அல்லது)**

ஆ) நீங்கள் படித்த நூல் ஒன்றின் சிறப்புகளைக் குறிப்பிட்டு அந்நூலைப் படிக்குமாறு பரிந்துரை செய்து உங்கள் நண்பருக்கும் கடிதம் ஒன்று எழுதுக.

40. படம் உணர்த்தும் கருத்தை நயமுற ஐந்து தொடர்களில் எழுதுக.



41. கருணாநிதி என்பவர் பணிவாய்ப்பு வேண்டி தன்விவரப் பட்டியல் தயார் செய்தல். அவருடைய பிறந்த தேதி 08.05.1991, தந்தை பெயர் விஜயன், படிப்பு : பி.ஏ. தமிழ், இரத்த வகை 'O' பாசிட்டிவ், அவருடைய வீட்டு முகவரி க.எண்.34/356, பாலக்கரை, திண்டுக்கல் என்ற முகவரியில் பெற்றோருடன் வசித்து வருகிறார். தேர்வர் தன்னை கருணாநிதியாக பாவித்து தன் விவரப் பட்டியல் ஒன்றை தயார் செய்க.

Way to Success
Wondershare PDFelement

42. அ) நீங்கள் எதிர்கொண்ட இயற்கை இடர் குறித்து விவரித்து எழுதுக.
*(மழை, வெள்ளம், புயல், வறட்சி)*

**(அல்லது)**

ஆ) **மொழிபெயர்க்க :**

*Respected ladies and gentlemen, I am Ilangovan studying tenth standard. I have come here to say a few words about our Tamil culture. Sangam literature shows that Tamils were best in culture and civilization about two thousand years ago. Tamils who have defined grammar for language have also defined grammar for life. Tamil culture is rooted in the life styles of Tamils throughout India, Srilanka, Malaysia, Singapore, England and Worldwide. Though our culture is very old, it has been updated consistently. We should feel proud about our culture. Thank you one and all.*

**குறிப்பு : செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா.**
**உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

கா-என்பதற்குப் பாரந்தாங்கும் கோல் என்று பொருள். இருமுனைகளிலும் சம எடைகளைக் கட்டிய தண்டினைத் தோளில் சுமந்து ஆடுவது காவடியாட்டம். மரத்தண்டின் இரு முனைகளிலும் சிற்ப வேலைப்பாடுள்ள பலகையைப் பொருத்தி, மூங்கில் குச்சிகளால் அரைவட்டமாக இணைக்கின்றனர். அந்த அரைவட்டப்பகுதியைப் பட்டுத்துணியால் மூடி அழகுபடுத்துகின்றனர். மேலும் மயிலிறகுக் கற்றைகளை இருபுறமும் பொருத்தி, மணிகளால் அழகுபடுத்திக் காவடியை உருவாக்குகின்றனர். காவடியின் அமைப்புக்கேற்ப மச்சக்காவடி, சர்ப்பக்காவடி, பூக்காவடி, தேர்க்காவடி, பறவைக்காவடி என்று அவற்றை அழைக்கின்றனர். இலங்கை, மலேசியா உட்பட, புலம்பெயர் தமிழர் வாழும் பிற நாடுகளிலும் காவடியாட்டம் ஆடப்படுகிறது.

(i) கா என்பதன் பொருள் யாது?
(ii) காவடியாட்டம் என்றால் என்ன?
(iii) காவடியாட்டத்தை எவ்வாறெல்லாம் அழைப்பர்?
(iv) காவடியாட்டம் எந்தெந்த நாடுகளில் ஆடப்படுகிறது?

## பகுதி – V (மதிப்பெண்கள்: 24)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** **3 x 8 = 24**

43. அ) மொழிப்பெயர்ப்பின் பயன்களையும் அதன் இன்றையத் தேவையினையும் விவரித்து எழுதுக.

**(அல்லது)**

ஆ) ‘ஜெயகாந்தன் தன்படைப்புகளைத் தனித்தன்மையில் தருபவர்’ என்ற கூற்றினை ஆய்வு செய்க.

44. அ) அழகிரிசாமியின் ‘ஒருவன் இருக்கிறான்’ சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதை மாந்தர்கள் குறித்து எழுதுக. **(அல்லது)**

ஆ) ‘அறிவியலார் ஸ்டீபன் ஹாக்கிங்குடன் விண்வெளிப்பயணம்’ என்னும் தலைப்பில் கற்பனைக் கதை ஒன்று எழுதுக.

45. அ) ‘அகநக நட்பதே நட்பு’ என்ற தலைப்பில் நண்பர்களுக்கு உதவிய சூழல்களைச் சுவைபட எழுதுக.

**(அல்லது)**

ஆ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று எழுதித் தலைப்பிடுக.

***குறிப்புகள் :*** *முன்னுரை - சாலைப் பாதுகாப்பு உயிர்ப் பாதுகாப்பு - சாலை விதிகள் - ஊர்தி ஓட்டுநருக்கான நெறிகள் - விபத்துகளைத் தவிர்ப்போம், விழிப்புணர்வு தருவோம் - முடிவுரை.*

## வெற்றிக்கு வழி மாதிரி பொதுத்தேர்வு வினாத்தாள் - 4

**நேரம் : 15 நிமிடம் + 3 மணி** **மதிப்பெண்கள் : 100**

### பகுதி – I (மதிப்பெண்கள்: 15)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **15 x 1 = 15**

1. 'உனதருளே பார்ப்பன் அடியேனே' - யாரிடம் யார் கூறியது?
   அ) குலசேகராழ்வாரிடம் இறைவன் ஆ) இறைவனிடம் குலசேகராழ்வார்
   இ) மருத்துவரிடம் நோயாளி ஈ) நோயாளியிடம் மருத்துவர்

2. உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும் பொருள்களின் இருப்பைக் கூட அறியாமல் கொடுப்பவன் என்றும் பாராட்டப்படுவோர்
   அ) உதியன்; சேரலாதன் ஆ) அதியன்; பெருஞ்சாத்தன்
   இ) பேகன்; கிள்ளிவளவன் ஈ) நெடுஞ்செழியன்; திருமுடிக்காரி

3. <u>சிவப்புச்சட்டை</u> பேசினார். - அடிகோடிட்ட சொல்லுக்கான தொகையின் வகை யாது?
   அ) பண்புத்தொகை ஆ) அன்மொழித்தொகை இ) உவமைத்தொகை ஈ) வினைத்தொகை

4. காட்டு விலங்குகளைச் ______ தடை செய்யப்பட்டுள்ளது. செய்த தவறுகளைச் ______ திருந்த உதவுகிறது.
   அ) சுட்டல், சுடுதல் ஆ) சுடுதல், சூட்டல் இ) சுடுதல், சுட்டல் ஈ) சூட்டல், சுடுதல்

5. "மருளுடையன இளமான்களே" இத்தொடர் உணர்த்தும் உட்கருத்து
   அ) மான்கள் மருள்கின்றன ஆ) பெண்கள் மருள்கின்றனர்
   இ) மக்கள் மருளவில்லை ஈ) இளமான்கள் மருளவில்லை

6. பூனையார் பால்சோற்றைக் கண்டதும் வருகிறார். குலசேகர ஆழ்வார் 'வித்துவக்கோட்டம்மா' என்று ஆண் தெய்வத்தை அழைத்துப் பாடுகிறார் - ஆகிய தொடர்களில் இடம்பெற்றுள்ள வழுவமைதி முறையே
   அ) மரபு வழுவமைதி, திணை வழுவமைதி ஆ) இட வழுவமைதி, மரபு வழுவமைதி
   இ) திணை வழுவமைதி, பால் வழுவமைதி ஈ) கால வழுவமைதி, இட வழுவமைதி

7. ஜெயகாந்தனின் திரைப்படமான படைப்பு
   அ) பராசக்தி ஆ) மன்னாதி மன்னன்
   இ) பல நேரங்களில் பல மனிதர்கள் ஈ) சில நேரங்களில் சில மனிதர்கள்

8. பயில்தொழில் - என்பதன் இலக்கணக் குறிப்பு
   அ) வினைத்தொகை ஆ) பண்புத்தொகை இ) உவமைத்தொகை ஈ) அன்மொழித்தொகை

9. தமிழின் கருவூலமாக அமைந்துள்ள நூல்
   அ) திருக்குறள் மெய்ப்பொருளுரை ஆ) திருக்குறள் பொருளுரை
   இ) திருக்குறள் தெளிவுரை ஈ) திருக்குறள் தெளிவுரை

10. எவற்றை அழித்தால் அவற்றால் வரும் துன்பமும் அழியும் என்று வள்ளுவர் கூறுகிறார்.
   அ) பகை, கல்வி, கேள்வி ஆ) ஆசை, சினம், அறியாமை
   இ) நட்பு, கல்வி, செல்வம் ஈ) ஆசை, பகை, போர்

11. பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. வெண்பா | - | i) அகவலோசை |
| 2. ஆசிரியப்பா | - | ii) தூங்கலோசை |
| 3. கலிப்பா | - | iii) செப்பலோசை |
| 4. வஞ்சிப்பா | - | iv) துள்ளலோசை |

   அ) 1-iii, 2-i, 3-iv, 4-ii ஆ) 1-ii, 2-iii, 3-iv, 4-i
   இ) 1-iii, 2- iv, 3-i, 4-ii ஈ) 1- iv, 2- ii, 3-iii, 4-i



Way to Success

Wondershare PDFelement



**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.**

*"வண்மை யில்லையோர் வறுமை யின்மையாற்*
*றிண்மை யில்லையோர் செறுநரின்மையால்*
*உண்மை யில்லைபொய் யுரையி லாமையால்*
*வெண்மை யில்லைபல் கேள்வி மேவலால்."*

12. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் _______.
    அ) சிலப்பதிகாரம் ஆ) பெரியபுராணம் இ) கம்பராமாயணம் ஈ) தேம்பாவணி
13. இப்பாடலை இயற்றியவர் _______.
    அ) இளங்கோவடிகள் ஆ) கம்பர் இ) சேக்கிழார் ஈ) வீரமாமுனிவர்
14. இப்பாடலில் உள்ள இயைபுத் தொடை சொற்களை எடுத்தெழுதுக.
    அ) வண்மை, றிண்மை ஆ) உண்மை, வெண்மை இ) இன்மையால், இன்மையால் ஈ) வறுமை, செறுநர்
15. 'வண்மை' என்ற சொல்லின் பொருளை எழுதுக.
    அ) கொடை ஆ) பகைவர் இ) கல்வியறிவு ஈ) வண்ணம்

## பகுதி – II (மதிப்பெண்கள்: 18)

### பிரிவு – 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்கவும்.** **4 x 2 = 8**
**21-வது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

16. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.
    அ) நெய்தல் நிலத்தவர் பாணர்களை வரவேற்றுக் குழல் மீன் கறியும் பிறவும் கொடுத்தனர்.
    ஆ) 1956ஆம் ஆண்டு நவம்பர் 1ஆம் நாள் கன்னியாகுமரி மாவட்டம் தமிழ்நாட்டுடன் இணைந்தது.
17. 'வேலொடு நின்றான் இடுஎன்றது போலும்
    கோலொடு நின்றான் இரவு' - என்ற குறட்பாவில்
    அ) அடிஎதுகை சொற்களை எடுத்தெழுதுக.
    ஆ) உவமஉருபு சொல்லைத் தேர்ந்து எழுதுக.
18. தரிசு, புறம்போக்கு எனும் நிலவகைகளின் பெயர்களுக்கான காரணங்களைக் கூறு?
19. ஹிப்பாலஸ் பருவக்காற்று குறிப்பு வரைக.
20. அவையம் - குறிப்பு வரைக.
21. 'உலகு' என முடியும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்கவும்.** **5 x 2 = 10**

22. கலைச்சொற்கள் தருக. அ) Tempest ஆ) Monolingual

**குறிப்பு : செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா.**
கூட்டப்பெயர்களை எழுதுக. அ) திராட்சை ஆ) சாவி

23. பேச்சு வழக்கினை எழுத்து வழக்காக மாற்றுதல்
    "அண்ணே! சம்முவத்தையும் கூட்டிக்கிட்டு வாங்கண்ணே! அவனெப் பாத்தே ரொம்ப நாளாச்சு!"
24. கீழ்வரும் தொடர்களில் பொருந்தாத கருப்பொருளைத் திருத்தி எழுதுக.
    அ) உழவர்கள் மலையில் உழுதனர். ஆ) முல்லைப் பூச்செடியைப் பார்த்தவாறே பரதவர் கடலுக்குச் சென்றனர்.
25. கொளல் வினாவை எடுத்துக்காட்டுடன் கூறுக.
26. ***கேளாது*** - பகுபத உறுப்பிலக்கணம் தருக.
27. பொருத்தமான இடங்களில் நிறுத்தற் குறியிடுக.
    அ) தாய் மகனிடம் கடைக்குச் சென்று வா என்று கூறினார்
    ஆ) எங்கிருந்து வருகிறீர்கள் எங்கிருந்து வருகிறீர்கள்
28. வெவ்வேறு பொருள் கொண்ட இருசொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக.
    அ) இரை, இறை ஆ) பால், பாழ்

## பகுதி – III (மதிப்பெண்கள்: 18)

### பிரிவு – 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** **2 x 3 = 6**

29. தமிழக தெற்கு எல்லையை மீட்டெடுப்பதில் சிலம்புச் செல்வரின் பணிகளை தொகுத்து எழுதுக.
30. ஜெயகாந்தனின் "இன்னுமொரு முகம்" குறித்து விளக்குக.



Way to Success Wondershare PDFelement

Wondershare
PDFelement



31. **உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

கொடையின் சிறப்பால் வள்ளல் எழுவர் போற்றப்படுவது, பழந்தமிழர் கொடை மாட்சியைப் புலப்படுத்துகிறது. எழுவரின் கொடைப் பெருமை சிறுபாணாற்றுப்படையிலும் பெருஞ்சித்திரனார் பாடலிலும் பதிவு செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. ஆற்றுப்படை இலக்கியங்கள், கொடை இலக்கியங்களாகவே உள்ளன. பதிற்றுப்பத்து சேர அரசர்களின் கொடைப் பதிவாகவே உள்ளது. புறநானூற்றின் கொடைப்பதிவும் குறிப்பிடத்தக்கது. அரியன என்று கருதாது, தயங்காது கொடுத்தலும் ஈதலால் வரும் இழப்புக்கு வருந்தாமையும் நாள்தோறும் கொடுத்தலும் கொடைப் பெருமைகளாகப் பேசப்படுகின்றன. வள்ளல்கள் "இல்லோர் ஒக்கல் தலைவன்", "பசிப்பிணி மருத்துவன்" என்றெல்லாம் போற்றப்பட்டனர்.

அ) எழுவரின் கொடைப் பெருமைப் பற்றி பதிவு செய்யப்பட்டுள்ள நூல் எது?
ஆ) கொடைப் பெருமைகளாகப் பேசப்படுபவை எவை?
இ) வள்ளல்கள் எவ்வாறு போற்றப்பட்டனர்?

## பிரிவு – 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **2 x 3 = 6**
**34-வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

32. "மாளாத காதல் நோயாளன் போல்" என்னும் தொடரிலுள்ள உவமை சுட்டும் செய்தியை விளக்குக.
33. மருவூர்ப்பாக்கக் கடைத்தெருவையும், உங்கள் ஊரில் உள்ள கடைத்தெருவையும் ஒப்பிட்டு மூன்று தொடர்கள் எழுதுக.
34. அடிபிறழாமல் எழுதுக:
அ) "அருளைப் பெருக்கி" எனத் தொடங்கும் செய்குதம்பிப் பாவலரின் பாடல். **(அல்லது)**
ஆ) "தென்னவ மகளே!" என தொடங்கும் 'அன்னை மொழியே' பாடல்.

## பிரிவு – 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** **2 x 3 = 6**

35. கீழ்வரும் பத்தியில் உள்ள தொடர் வகைகளை எடுத்து எழுதுக.

மாடியிலிருந்து ***இறங்கினார் முகமது. அவர் பாடகர்.*** பாடல்களைப் ***பாடுவதும் கேட்பதும்*** அவருக்குப் பொழுதுபோக்கு. அவரது அறையில் ***கேட்ட பாடல்களையும் கேட்காத பாடல்களையும்*** கொண்ட குறுந்தகடுகளை ***அடுக்கு அடுக்காக*** வைத்திருப்பார்.

36. தீவக அணியைச் சான்றுடன் எழுதுக.
37. "எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு" -இக்குறட்பாவினை அலகிட்டு வாய்ப்பாடு தருக.

## பகுதி – IV (மதிப்பெண்கள்: 25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **5 x 5 = 25**

38. **அ) கீழ்வரும் பாடலில் உள்ள நயங்களைப் பாராட்டி எழுதுக.**

"கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும்வகை கிடைத்த
குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே
ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத் தண்ணீரே
உகந்த தண்ணீர் இடைமலர்ந்த சுகந்தமண மலரே
மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங் காற்றே
மென்காற்றில் விளைசுகமே சுகத்தில்உறும் பயனே
ஆடையிலே எனைமணந்த மணவாளா பொதுவில்
ஆடுகின்ற அரசேஎன் அலங்கல் அணிந் தருளே" - வள்ளலார்

**(அல்லது)**

ஆ) மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தை ஒப்பிடுக.

39. அ) கொரோனா பெருந்தொற்று நம்மிடம் பரவாமல் இருப்பதற்குரிய வழிமுறைகளைக் கூறி தோழனுக்கு விழிப்புணர்வு மடல் வரைக.

**(அல்லது)**

ஆ) உங்கள் தெருவில் மின்விளக்குகள் பழுதடைந்துள்ளன. அதனால் இரவில் சாலையில் நடந்து செல்வோருக்கு ஏற்படும் இடையூறுகளை எழுதி ஆவன செய்யும்படி மின்வாரிய அலுவலருக்கு விண்ணப்பம் எழுதுக.

Wondershare PDFelement



40. படம் உணர்த்தும் கருத்தைக் கவினுற எழுதுக.



41. திருச்சி மாவட்டம், உறையூர், தமிழன் நகர், தென்றல் தெருவில் 100-ஆம் இலக்க வீட்டில் குடியிருக்கும் பகலவனின் மகள் தேன்மொழி பத்தாம் வகுப்பு படிக்கின்றார். இவர் தொலைபேசி எண் : 9898989999. உறையூர் கிளை நூலகத்தில் உறுப்பினராக சேர இவர் விரும்புகிறார். காப்புத்தொகை ₹100-ம் சந்தா தொகை ₹50-ம் செலுத்த உள்ளார். தேர்வர் தம்மைத் தேன்மொழியாகக் கருதி, கொடுக்கப்பட்டுள்ள படிவத்தை நிரப்புக.

42. அ) கோவில்களிலும் பழமையான நினைவுச் சின்னங்களிலும் கட்டியவர்கள் பெயர்களும் வரலாறும் இடம்பெற்றிருக்கும். அவை நம் பழம்பெருமையையும் வரலாற்றையும் அறியச் செய்யும் அரிய ஆவணங்கள். இவற்றைப் பராமரித்து பாதுகாக்கும் வழிமுறைகளை எழுதுக. **(அல்லது)**

ஆ) மொழிபெயர்க்க.

*It is during our darkest moments that we must focus to see the light – Aristotle.*

*Success is not final, failure is not fatal. It is the courage to continue that counts. – Winston Churchill.*

**குறிப்பு : செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா.**

**உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

வாய்மையைச் சிறந்த அறமாகச் சங்க இலக்கியங்கள் பேசுகின்றன. வாய்மை பேசும் நாவே உண்மையான நா என்ற கருத்தை, "பொய்யாச் செந்நா", "பொய்படுபறியா வயங்கு செந்நா" என்று இலக்கியங்கள் கூறுகின்றன. நாக்கு ஓர் அதிசய திறவுகோல் என்பார்கள். இன்பத்தின் கதவைத் திறப்பதுவும் அதுதான். மனிதனின் துன்பத்தின் கதவுகளைத் திறப்பதுவும் அதுதான். மெய் பேசும் நா மனிதனை உயர்த்துகிறது. பொய் பேசும் நா மனிதனைத் தாழ்த்துகிறது. "பழைய நன்மொழி" என்று வாய்மையை நற்றிணை குறிப்பிடுகின்றது. இதற்கு மாறாகப் 'பொய்மொழி கொடுஞ்சொல்' என்று பொய்யைக் குறிப்பிடுகின்றது. நிலம் புடைபெயர்ந்தாலும் பொய் சொல்லக்கூடாது என்பது பல இலக்கியங்களில் வற்புறுத்தப்பட்டுள்ளது.

(i) வாய்மையை நற்றிணை எவ்வாறு குறிப்பிடுகின்றது?

(ii) 'வாய்மை பேசும் நாவே உண்மையான நா' என்ற கருத்தை இலக்கியங்கள் எவ்விதம் கூறுகின்றன?

(iii) மனிதனைத் தாழ்த்துவது எது?

(iv) நிலம் புடைபெயர்ந்தாலும் செய்யக்கூடாதது எது?

(v) நாக்கு எதனால் அதிசய திறவுகோலாகிறது?

**பகுதி – V (மதிப்பெண்கள்: 24)**

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும். 3 x 8 = 24**

43. அ) விருந்தோம்பல் பற்றித் தமிழ் இலக்கியங்களான புறநானூறு, நற்றிணை கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக. **(அல்லது)**

ஆ) சங்க இலக்கியங்களில் காணப்படும் ஐந்து அறக்கருத்துகளைத் தொகுத்து, அவை இன்றும் தேவையே என்பதை நிறுவுக.

44. அ) அன்னமய்யா என்னும் பெயருக்கும், அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் 'கோபல்லபுரத்து மக்கள்' கதைப்பகுதி கொண்டு விவரி. **(அல்லது)**

ஆ) 'மங்கையராய்ப் பிறப்பதற்கே' என்ற துணைப்பாடத்தின் வாயிலாக முன்னேற்றம் அடைந்த சிலரின் வாழ்வியல் நிகழ்வுகளை எழுதுக.

45. அ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.

*முன்னுரை – தமிழகம் தந்த தவப்புதல்வர் – நாட்டுப்பற்று – மொழிப்பற்று – பொதுவாழ்வில் தூய்மை – எளிமை – மக்கள் பணியே மகத்தான பணி – முடிவுரை.*

**(அல்லது)**

ஆ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.

*முன்னுரை – உழவுத்தொழில் – உழவர் – உழவுத்தொழிலின் இன்றியமையாமை – உழவர்களை மதித்தல் – உணவினை வீணாக்காமல் உண்ணுதல் – முடிவுரை.*

Way to Success

Wondershare PDFelement


## வெற்றிக்கு வழி மாதிரி பொதுத்தேர்வு வினாத்தாள் - 5

**நேரம் : 15 நிமிடம் + 3 மணி** **மதிப்பெண்கள் : 100**

**பகுதி – I (மதிப்பெண்கள்: 15)**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **15 x 1 = 15**

1. இந்தியாவில் காற்றாலை மின் உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் மாநிலம்
அ) குஜராத் ஆ) கேரளா இ) தமிழ்நாடு ஈ) ஆந்திரா
2. கடல் தன் நீரலையைத் தடுத்து நிறுத்தி_______காக்கிறது
அ) கப்பலைக் ஆ) சங்கினைக் இ) சிப்பியைக் ஈ) முத்துக்களைக்
3. மலைபடுகடாமின் பாட்டுடைத்தலைவன் யார்?
அ) நல்லியக்கோடன் ஆ) நன்னன்
இ) பெருஞ்சேரல் இரும்பொறை ஈ) இளஞ்சேரல் இரும்பொறை
4. சோவியத் நாட்டு விருது பெற்ற ஜெயகாந்தனின் நூல்
அ) குரு பீடம் ஆ) இமயத்துக்கு அப்பால் இ) பிரளயம் ஈ) யுகசந்தி
5. “மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்” – வேலவன் குன்றமும் மாலவன் குன்றமும் குறிப்பவை முறையே
அ) திருப்பதியும் திருத்தணியும் ஆ) திருத்தணியும் திருப்பதியும்
இ) திருப்பதியும் திருங்செந்தூரும் ஈ) திருப்பரங்குன்றமும் பழனியும்
6. வைகறை என்ற சிறுபொழுது எத்திணைக்குரியது?
அ) குறிஞ்சி ஆ) முல்லை இ) மருதம் ஈ) நெய்தல்
7. ‘தன் நாட்டு மக்களுக்குத் தந்தையும் தாயும் இருந்த அரசன்’ என்னும் மெய்க்கீர்த்தித் தொடர் உணர்த்தும் பொருள்
அ) நெறியோடு நின்று காவல் காப்பவர் ஆ) பண்பட்ட மனிதநேயம் கொண்டவர்
இ) மேம்பட்ட நிருவாகத்திறன் பெற்றவர் ஈ) மிகுந்த செல்வம் உடையவர்
8. சரியான அகர வரிசையைத் தேர்ந்தெடுக்க
அ) ஐந்து, ஆலமரம், பாடல், போட்டி ஆ) போட்டி, பாடல், ஐந்து, ஆலமரம்
இ) ஆலமரம், ஐந்து, பாடல், போட்டி ஈ) பாடல், போட்டி, ஆலமரம், ஐந்து
9. இருவர் உரையாடுவது போன்ற ஓசை உடையது
அ) தூங்கலோசை ஆ) துள்ளலோசை இ) அகவலோசை ஈ) செப்பலோசை
10. எனக்கு எழுதித் தருகிறாயா? என்ற வினாவுக்கு, எனக்கு யார் எழுதி தருவார்கள்? என்று விடையளிப்பது - இதில் இடம்பெற்றுள்ள வினா விடை வகைகள்
அ) ஐய வினா, எதிர்வினாதல் விடை ஆ) கொளல் வினா, எதிர்வினாதல் விடை
இ) ஏவல் வினா, சுட்டு விடை ஈ) ஏவல் வினா, எதிர்வினாதல் விடை
11. நட - இவ்வினையடியின் தொழிற்பெயர் விகுதி அல்லாது வந்த சொல்
அ) நடை ஆ) நடத்தல் இ) நடத்த ஈ) நடத்தை

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.**

*வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன்பால்*
*மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்*
*மீளாத் துயர்தரினும் வித்துவக் கோட்டம்மா! நீ*
*ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே.*

12. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல்
அ) திருப்பாவை ஆ) திருவெம்பாவை இ) தேவாரம் ஈ) பெருமாள் திருமொழி
13. இப்பாடலின் ஆசிரியர்
அ) ஆண்டாள் ஆ) திருமங்கையாழ்வார் இ) குலசேகராழ்வார் ஈ) நம்மாழ்வார்
14. வித்துவக்கோட்டம்மா! - இலக்கணக் குறிப்பு
அ) உருவகத் தொடர் ஆ) விளித்தொடர் இ) உவமைத்தொடர் ஈ) வினைத்தொகை
15. இப்பாடல் எத்தனையாவது பாசுரமாக இடம்பெற்றுள்ளது?
அ) 591 ஆ) 691 இ) 916 ஈ) 619


Way to Success

Wondershare PDFelement



## பகுதி – II (மதிப்பெண்கள்: 18)

### பிரிவு – 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்கவும்.** **4 x 2 = 8**

**21-வது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

16. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.
    அ) ஒரு மொழி பொதுமக்களாலும் அதன் இலக்கியம், புல மக்களாலும் அமையப்பெறும்.
    ஆ) பாவாணர் உலகத் தமிழ் கழகத்தை நிறுவித் தலைவராக இருந்தவர்.
17. உயிராக காற்று விளங்குகிறது - இக்கூற்றை நிறுவ இரண்டு இலக்கியச் சான்றுகள் தருக.
18. ஒரு மன்னன், பகைவர் இன்றியே தானே கெடுவான் எப்போது என்று வள்ளுவர் குறிப்பிடுகின்றார்?
19. செய்குதம்பிப் பாவலரின் கல்வி பற்றிய கருத்தினை முழக்கத் தொடர்களாக்குக.
20. வறுமையிலும் படிப்பின்மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி. என்பதற்குச் சான்று தருக.
21. குடி - என முடியும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்கவும்.** **5 x 2 = 10**

22. பழமொழிகளை நிறைவு செய்க.
    அ) உப்பில்லாப்_______ ஆ) விருந்தும்_______
23. பின்வரும் தொடர்களில் எழுவாயைச் செழுமை செய்க.
    அ) மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும்.
    ஆ) கல்வியே ஒருவருக்கு உயர்வு தரும்.
24. ஊர்ப்பெயர்களின் மரூஉவை எழுதுக.
    அ) மன்னார்குடி ஆ) புதுக்கோட்டை இ) சைதாப்பேட்டை ஈ) புதுச்சேரி
25. மரபுத் தொடர்களை தொடரில் அமைத்து எழுதுக
    அ) முதலைக்கண்ணீர் ஆ) கண்துடைப்பு
26. பொருத்தமான இடங்களில் நிறுத்தற் குறிகளை இடுக.
    சென்னை மாநகராட்சியின் சிறப்புக் கூட்டமொன்றை அப்போதைய மாநகரத் தந்தை செங்கல்வராயன் தலைமையில் கூட்டி சென்னை பற்றிய தீர்மானமொன்றை முன்மொழிந்து தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம் என்று முழங்கினேன் தீர்மானம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டமை நடுவணரசை அசைத்தது
27. **அமர்ந்தான்** - பகுபத உறுப்பிலக்கணம் தருக.
28. உவமைத்தொகையைச் சான்றுடன் விளக்குக.

## பகுதி – III (மதிப்பெண்கள்: 18)

### பிரிவு – 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** **2 x 3 = 6**

29. தாவரங்களின் இளம்பருவத்திற்கான சொற்களை எழுதுக.
30. போர் அறம் குறித்து சங்க இலக்கியங்கள் கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.
31. **உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**
    தமிழ்நாடு எத்துணைப் பொருள்வளமுடையதென்பது, அதன் விளைபொருள் வகைகளை நோக்கினாலே விளங்கும். பிறநாடுகளிலுள்ள கூலங்களெல்லாம் சிலவாகவும் சில்வகைப்பட்டனவாகவுமிருக்க, தமிழ்நாட்டிலுள்ளவையோ, பலவாகவும் கழிபல வகைப்பட்டனவாகவும் இருக்கின்றன. எடுத்துக்காட்டாக, கோதுமையை எடுத்துக்கொள்ளின் அதில் சம்பாக் கோதுமை, குண்டுக் கோதுமை, வாற்கோதுமை முதலிய சில வகைகளேயுண்டு. ஆனால், தமிழ்நாட்டு நெல்லிலோ, செந்நெல், வெண்ணெல், கார்நெல் என்றும் சம்பா, மட்டை, கார் என்றும் பல வகைகள் இருப்பதுடன் அவற்றுள் சம்பாவில் மட்டும் ஆவிரச்சம்பா, ஆனைக்கொம்பன் சம்பா, குண்டுச் சம்பா, குதிரைவாலிச் சம்பா, சிறுமணிச் சம்பா, சீரகச் சம்பா முதலிய அறுபது உள்வகைகள் உள்ளன.
    அ) தமிழ்நாட்டின் பொருள் வளத்தை எவ்வாறு அறியலாம்?
    ஆ) கோதுமையின் வகைகள் சிலவற்றை எழுதுக.
    இ) இவ்வுரைப் பத்திக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்று தருக.

Way to Success Wondershare PDFelement

Wondershare PDFelement



**பிரிவு – 2**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **2 x 3 = 6**

**34-வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

32. மாணிக்கவாசகர் அண்டப் பிறப்பு பற்றிக் கூறும் செய்தி யாது?

33. 'முதல் மழை விழுந்ததும்' என்னவெல்லாம் நிகழ்வதாக கு.ப.ரா. குறிப்பிடுகிறார்?

34. அடிபிறழாமல் எழுதுக.

அ) "தூசும் துகிரும்" எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடல் **(அல்லது)**

ஆ) "விருந்தினனாக ஒருவன்" எனத் தொடங்கும் காசிக்காண்டப்பாடல்

**பிரிவு – 3**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** **2 x 3 = 6**

35. முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்

- இக்குறட்பாவில் அமைந்துள்ள பொருள்கோளின் வகையைச் சுட்டி விளக்குக.

36. கரப்பிடும்பை இல்லாரைக் காணின் நிரப்பிடும்மை
எல்லாம் ஒருங்கே கெடும்

- இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.

37. ஏகதேச உருவக அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

**பகுதி – IV (மதிப்பெண்கள்: 25)**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **5 x 5 = 25**

38. அ) முல்லைப் பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக.

**(அல்லது)**


ஆ) ஐம்பூதங்களின் தோற்றம் பற்றிப் பரிபாடலின் கருத்தை விவரி.

39. அ) நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் 'உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்' என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி, அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.

**(அல்லது)**

ஆ) உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும், விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்கு கடிதம் எழுதுக.

40. படம் உணர்த்தும் கருத்தை நயமுற ஐந்து தொடர்களில் எழுதுக.



41. கண்ணன் என்பவரின் மகன் வளவன் பத்தாம் வகுப்பில் 500க்கு 425 மதிப்பெண்கள் பெற்று மேல்நிலை வகுப்பில் கணிதப் பிரிவில் தமிழ் வழியில் சேர விரும்புகிறார். அவருடைய பிறந்த தேதி 15.05.2004. அவர் தமிழ்ப்பாடத்தில் 88, ஆங்கிலப் பாடத்தில் 78, கணிதப் பாடத்தில் 80, அறிவியல் பாடத்தில் 92, சமூக அறிவியல் பாடத்தில் 86 மதிப்பெண்களும் பெற்றுள்ளார். அவருடைய பத்தாம் வகுப்பு பதிவெண் 5264756. கடந்த 2019 மார்ச் மாதம் அவர் பத்தாம் வகுப்பினை தமிழ் வழியில் படித்து தேர்ச்சி பெற்றுள்ளார். அவருடைய தாயாரின் பெயர் கோமதி. 45, நேரு நகர், திண்டிவனம் என்ற முகவரியில் பெற்றோருடன் வசித்து வருகிறார். தேர்வர் தன்னை வளவனாக பாவித்து இணைக்கப்பட்டுள்ள படிவங்களில் உரிய படிவத்தினை தேர்ந்தெடுத்து நிரப்பவும்.

waytosuccess

42. அ) புயல் அறிவிப்பைக் கேட்ட நீங்கள், உங்களையும் உங்கள் குடும்பத்தாரையும் காப்பாற்றும் வகையில் செய்யும் செயல்களை வரிசைப்படுத்தி எழுதுக.

**(அல்லது)**

ஆ) மொழி பெயர்க்க:

*Among the five geographical divisions of the Tamil country in Sangam literature, the Marutam region was the fit for cultivation, as it had the most fertile lands. The properity of a farmer depended on getting the necessary sunlight, seasonal rains and the fertility of the soil. Among these elements of nature, sunlight was considered indispensable by the ancient Tamils.*

**குறிப்பு : செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா.**

**உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

ஏந்தவொரு புதிய தொழில்நுட்பமும் ஒரே நாளில் வந்து விடுவதில்லை. 1980களில் ஒவ்வொருவருக்குமான தனிநபர் கணினிகளின் வளர்ச்சியும், இணையப் பயன்பாட்டின் பிறப்பும் இன்றைய மின்னணுப் புரட்சிக்குக் காரணமாயின. அவற்றுள் இவ்வுலகை மிகுதியாக ஆளக்கூடிய ஒரு தொழிழ்நுட்பம் செயற்கை நுண்ணறிவு. அறையின் மூலையில் நிறுவப்பட்டிருக்கும் கண்காணிப்புக் கருவி அசைவு நிகழும் பக்கம் தன் பார்வையைத் திருப்புகிறதே அதனுள் பொதிந்திருப்பது செயற்கை நுண்ணறிவு. அந்த வழியில் போக்குவரத்து நெரிசல் அதிகம். 'இதுவே சுருக்கமான வழி' என்று நமது திறன்பேசியில் உள்ள வழிகாட்டி வரைபடம் காட்டுகிறதல்லவா? அதற்குக் காரணமாக இருப்பதும் செயற்கை நுண்ணறிவே.

i) எந்த ஆண்டு தனிநபர் கணினி உருவாக்கப்பட்டது?
ii) செயற்கை நுண்ணறிவு என்றால் என்ன?
iii) நமது பயணத்தை எளிதாக்குவது எது?
iv) இணையப் பயன்பாடு எப்புரட்சி உருவாகக் காரணமானது?
v) இவ்வுரைப்பத்திக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்றைத் தருக.

## பகுதி – V (மதிப்பெண்கள்: 24)

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும்.** **3 x 8 = 24**

43. அ) ஒரு குழந்தையைத் தூக்கவும் கீழே விழுந்த ஒரு தேனீர்க் கோப்பையை எடுக்கவும் மென்பொருள் அக்கறை கொள்ளுமா? வெறும் வணிகத்துடன் நின்று விடுமா? இக்கருத்துகளை ஒட்டிச் செயற்கை நுண்ணறிவின் எதிர்கால வெளிப்பாடுகள் பற்றி ஒரு கட்டுரை வரைக.

**(அல்லது)**

ஆ) நிகழ்கலைகளின் எதிர்காலம் சிறப்பாக அமைய உன்னுடைய கருத்துகளை தெளிவாக விவரித்து எழுதுக.

44. அ) கருணையனின் தாய் மறைவுக்கு. வீரமாமுனிவர் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க.

**(அல்லது)**

ஆ) மலைபடுகடாம் குறிப்பிடும் தினைச்சோற்று விருந்து பற்றி விளக்குக.

45. அ) குறிப்பு – நூலின் அமைப்பு – நூலின் மையப் பொருள் - மொழி நடை – வெளிப்படுத்தும் கருத்து – நூலின் நயம் - நூலின் கட்டமைப்பு – சிறப்புக் கூறு – நூல் ஆசிரியர் ஆகிய உட்தலைப்புகளைக் கொண்டு பள்ளி ஆண்டு மலருக்காக, நீங்கள் நூலகத்தில் படித்த கதை/கட்டுரை/சிறுகதை/கவிதை நூலுக்கான மதிப்புரை எழுதுக. **(அல்லது)**

ஆ) நாட்டு விழாக்கள் - விடுதலைப் போராட்ட வரலாறு – நாட்டின் முன்னேற்றத்தில் மாணவர் பங்கு – குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் 'மாணவர் பருவமும் நாட்டுப் பற்றும்' என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.

********

Wondershare PDFelement

No of Printed Pages: 4 Roll No

# SMART TEACHERS ASSOCIATION & WAY TO SUCCESS GROUPS
## SSLC MODEL PUBLIC EXAMINATION – 2022-2023
## மொழிப்பாடம் I - தமிழ்

**கால அளவு : 15 நிமிடம் + 3 மணி** **மொத்த மதிப்பெண்கள் : 100**

**அறிவுரை :** (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளனவா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.
(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்தவும்.

**குறிப்பு :** (1) இவ்வினாத்தாள் ஐந்து பகுதிகளைக் கொண்டது.
(2) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

### பகுதி – I (மதிப்பெண்கள் : 15)

**i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **15 x 1 = 15**

**ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

1. மலர்கள் தரையில் நழுவும். எப்போது?
   அ) அள்ளி முகர்ந்தால் ஆ) தளரப் பிணைத்தால்
   இ) இறுக்கி முடிச்சிட்டால் ஈ) காம்பு முறிந்தால்

2. 'மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம்வைத்தும்' என்னும் சின்னமனூர் செப்பேடு குறிப்பு உணர்த்தும் செய்தி
   அ) சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது
   ஆ) காப்பியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது
   இ) பக்தி இலக்கியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது
   ஈ) சங்கம் மருவிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

3. 'பூக்கையைக் குவித்துப் பூவே புரிவொடு காக்க' என்று __________ வேண்டினார்.
   அ) கருணையன், பூக்களுக்காக ஆ) எலிசபெத், தமக்காக
   இ) கருணையன், எலிசபெத்துக்காக ஈ) எலிசபெத், பூமிக்காக

4. அதிகாலைப் பொழுதில் **செங்காந்தள்** பூக்களின் மத்தியில் **சாரைப்பாம்பு** ஊர்ந்து சென்றது. - இத்தொடரில் தடித்த சொல்லின் தொகைநிலைத் தொடர்கள் முறையே _________, __________.
   அ) பண்புத்தொகை, உம்மைத்தொகை ஆ) இருபெயரொட்டுப் பண்புத்தொகை, பண்புத்தொகை
   இ) வினைத்தொகை, பண்புத்தொகை ஈ) பண்புத்தொகை, இருபெயரொட்டுப் பண்புத்தொகை

5. குலசேகர ஆழ்வார் 'வித்துவக்கோட்டம்மா' என்று ஆண் தெய்வத்தை அழைத்துப் பாடுகிறார். பூனையார் பால்சோற்றைக் கண்டதும் வருகிறார். - ஆகிய தொடர்களில் இடம்பெற்றுள்ள வழுவமைதி முறையே
   அ) மரபு வழுமைதி, திணை வழுமைதி ஆ) இடவழுமைதி, மரபு வழுமைதி
   இ) பால் வழுமைதி, திணை வழுமைதி ஈ) கால வழுமைதி, இடவழுமைதி

6. மாறாதிருப்பவை எனக் கவிஞர் கண்ணதாசன் குறிப்பிடுவன :
   அ) மானிடர், காடுமேடு, உலகம் ஆ) கல், மண், சாலை
   இ) சாலை, தலைவர், உலகம் ஈ) கல், மரம், காடுமேடு

7. பொருத்துக.
   அ. தாள் - 1. காய்ந்த தோகை
   ஆ. சண்டு - 2. கரும்பின் நுனிப்பகுதி
   இ. வடலி - 3. புல்
   ஈ. கொழுந்தாடை - 4. பனையின் இளநிலை
   அ) 1, 2, 3, 4 ஆ) 3, 1, 4, 2 இ) 4, 1, 3, 2 ஈ) 3, 4, 2, 1

8. 'வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால்
   மாளாத காதல் நோயாளன் போல் மாய்த்தால்' - இப்பாடலில் இடம் பெறும் நயங்கள்
   அ) எதுகை ஆ) மோனை இ) இயைபு ஈ) அனைத்தும்

9. 'வீட்டைத் துடைத்துச் சாயம் அடித்தல்' இவ்வடி குறிப்பிடுவது __________.
   அ) காலம் மாறுவதை ஆ) வீட்டைத் துடைப்பதை
   இ) இடையறாது அறப்பணி செய்தலை ஈ) வண்ணம் பூசுவதை

10. "எனக்கு எழுதித் தருகிறாயா?" என்ற வினாவிற்கு "எனக்கு யார் எழுதித் தருவார்கள்?" என்று விடையளிப்பது __________, __________.
    அ) ஐய வினா, வினா எதிர் வினாதல் விடை ஆ) ஏவல் வினா, வினா எதிர் வினாதல் விடை
    இ) அறியா வினா, சுட்டு விடை ஈ) ஏவல் வினா, உறுவது கூறல் விடை

Way to Success

Wondershare PDFelement

11. பின்வருவனற்றுள் முறையான தொடர் ________.

அ) தமிழர் பண்பாட்டில் தனித்த வாழை இலைக்கு இடமுண்டு.

ஆ) தமிழர் வாழை இலைக்குப் பண்பாட்டில் தனித்த இடமுண்டு.

இ) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு.

ஈ) தமிழர் வாழை பண்பாட்டில் தனித்த இலைக்கு இடமுண்டு.

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.**

*"பகர்வனர் திரிதிரு நகரவீதியும்*
*பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்*
*கட்டு நுண்வினைக் காருகர் இருக்கையும்;*
*தூசும் துகிரும் ஆரமும் அகிலும்."*

12. இவ்வடிகள் இடம் பெற்றுள்ள நூல் __________.

அ) சிலப்பதிகாரம் ஆ) கம்பராமாயணம் இ) தேம்பாவணி ஈ) மெய்க்கீர்த்தி

13. இப்பாடலின் ஆசிரியர் பெயர் __________.

அ) கம்பர் ஆ) வீரமாமுனிவர் இ) கு.ப. ராஜகோபாலன் ஈ) இளங்கோவடிகள்

14. இப்பாடலில் இடம் பெறும் நறுமணப்பொருள்கள் __________, __________.

அ) பூ, சந்தனம் ஆ) அகில், சந்தனம் இ) அகில், ஏலக்காய் ஈ) சந்தனம், ஏலக்காய்

15. காருகர் - என்பதன் பொருள் ___________.

அ) நெய்பவர் ஆ) வல்லுநர் இ) ஓவியர் ஈ) வணிகர்

## பகுதி – II (மதிப்பெண்கள் : 18)

### பிரிவு – 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **4 x 2 = 8**
**வினா எண் 21-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

16. மாஅல் - பொருளும் இலக்கணக்குறிப்பும் தருக.

17. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.

(அ) தானியம் ஏதும் இல்லாத நிலையில் விதைக்காக வைத்திருந்த தினையை உரலில் இட்டுக் குத்தியெடுத்து விருந்தினருக்கு விருந்தளித்தாள் தலைவி.

(ஆ) 'இளங்கோ தந்த சிலம்பு, தமிழினத்தின் பொதுச்சொத்து' என்று கூறியவர் சிலம்புச் செல்வர் ம.பொ.சி.

18. மருத்துவத்தில் மருந்துடன் அன்பும் நம்பிக்கையும் ஆற்றும் பாங்கினை எழுதுக.

19. படம் வெளிப்படுத்தும் நிகழ்த்துக்கலை எது? அதைப் பற்றி இரண்டு தொடர்களை எழுதுக.



20. அவையம் - குறிப்பு வரைக.

21. "அருமை" எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **5 x 2 = 10**

22. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.

காகத்திற்கு காது உண்டா? அதற்கு காது கேட்குமா?

எல்லா பறவைகளுக்கும் காது உண்டு. செவி துளைகள் இறகுகளால் மூடி இருக்கும். மற்றப்படி பாலூட்டிகளில் உள்ளதுபோல் புறசெவிமடல் இருக்காது. காகத்திற்கு காது உண்டு. காதுக் கேட்கும்.

23. 'தணிந்தது' பகுபத உறுப்பிலக்கணம் தருக.

24. கொடுக்கப்பட்ட இருசொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக.

(அ) வளி - வாளி (ஆ) கொள் - கோள்

25. ஐவகை நிலங்களின் சிறுபொழுதுகளை எழுதுக.

26. கலைச்சொல் தருக.

(அ) Consulate (ஆ) Monolingual

27. நாள் காட்டியில் ஞாயிற்றுக்கிழமை பத்தாம் நாள் எனில் அந்த வாரத்தில் புதன்கிழமையும் சனிக்கிழமையும் எந்த நாள்களில் வரும் என்பதைத் தமிழெண்களில் எழுதுக.

28. ஒயிலாட்டத்தில் குழுவினர் ஒரே நிறத் துணியை முண்டாசுபோலக் கட்டிக் கொண்டு, காலில் சலங்கை அணிந்துகொண்டு, கையில் ஒரு சிறுதுணியை இசைக்கேற்ப வீசியும் ஆடுவர். (தனிச்சொற்றொடர்களாக மாற்றுக.)

Way to Success

Wondershare PDFelement

## பகுதி – III (மதிப்பெண்கள் : 18)

### பிரிவு – 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** **2 x 3 = 6**

29. இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா? என்பது குறித்து எழுதுக.

30. **உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

சங்கப் பாக்களில் அறம் பற்றிய அறிவுரைகள் பெரும்பாலும் அரசர்களை முதன்மைப்படுத்தியே கூறப்பட்டுள்ளன. மன்னர்களுடைய செங்கோலும் வெண்கொற்றக்குடையும் அறத்தின் குறியீடுகளாகப் போற்றப்பட்டன. அரசன் செங்கோல் போன்று நேரிய ஆட்சியை மேற்கொள்ள வேண்டும் என்பது பல பாடல்களில் வலியுறுத்தப்பட்டுள்ளது. நீர்நிலை பெருக்கி நிலவளம் கண்டு உணவுப்பெருக்கம் காண்பதும் அதனை அனைவருக்கும் கிடைக்கச் செய்வதும் அரசனின் கடமையாகச் சொல்லப்பட்டது. குற்றங்களை, அறத்தின் அடிப்படையில் ஆராய்ந்து தண்டனை வழங்க வேண்டும் என்கிறார் ஊன் பொதிப் பசுங்குடையார்.

(அ) அறத்தின் குறியீடுகளாக எவை போற்றப்பட்டன?

(ஆ) அரசனின் கடமை என்ன?

(இ) குற்றங்கள் பற்றி ஊன் பொதிப் பசுங்குடையாரின் கூற்று யாது?

31. "தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்" இடம் சுட்டிப் பொருள் விளக்குக.

### பிரிவு – 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **2 x 3 = 6**

**வினா எண் 34-க்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

32. கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்துதலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?

33. 'கவிஞன் யானோர் காலக் கணிதம்' - எனத் தொடங்கும் கவிஞர் கண்ணதாசனின் கவிதையில் உங்களைக் கவர்ந்த மூன்று தொடர்களை எழுதி காரணத்தைக் குறிப்பிடுக.

34. அடிபிறழாமல் எழுதுக.

(அ) "புண்ணியப் புலவீர்" எனத் தொடங்கும் பரஞ்சோதி முனிவரின் பாடலை எழுதுக.

**(அல்லது)**

(ஆ) கம்பராமாயணத்தின் "வெய்யோனொளி" எனத் தொடங்கும் பாடலை எழுதுக.

### பிரிவு – 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** **2 x 3 = 6**

35. புறத்திணைகளில் எதிரெதிர்த் திணைகளை அட்டவணைப்படுத்துக.

36. "மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலும்
கையில் தனிச்சிலம்பும் கண்ணீரும் - வையைக் கோன்
கண்டளவே தோற்றான், அக்காரிகைதன் சொற்செவியில்
உண்டளவே தோற்றான் உயிர்" - இப்பாடலில் இடம் பெற்றுள்ள அணியை விளக்கி எழுதுக.

37. "வேலொடு நின்றான் இடுவென் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு" - இக்குறட்பாவினை அலகிட்டு வாய்ப்பாடு தருக.

## பகுதி – IV (மதிப்பெண்கள் : 25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **5 x 5 = 25**

38. (அ) பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள மெய்க்கீர்த்திப் பாடலின் நயத்தை விளக்குக.

**(அல்லது)**


(ஆ) தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுறமொழியும் பாங்கினை விளக்குக.

39. (அ) மாநில அளவில் நடைபெற்ற "மரம் இயற்கையின் வரம்" என்னும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.

**(அல்லது)**

(ஆ) நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் 'உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்' என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி, அந்நாளிதழ் ஆசிரியருக்கு கடிதம் எழுதுக.

40. படம் உணர்த்தும் கருத்தை நயமுற ஐந்து தொடர்களில் எழுதுக.



41. கொடுக்கப்பட்டுள்ள நூலக உறுப்பினர் படிவத்தினைப் பூர்த்தி செய்க.

Way to Success

Wondershare PDFelement

42. (அ) வானொலியில் புயலின் அறிவிப்பைக் கேட்ட நீங்கள், உங்களையும் உங்கள் குடும்பத்தாரையும் காப்பாற்றும் வகையில் செய்யும் செயல்களை குறித்து எழுதுக.

**(அல்லது)**

(ஆ) மொழிபெயர்க்க :

Malar : Devi, switch off the lights when you leave the room.
Devi : Yeah, We have to save electricity.
Malar : Our nation spends a lot of electricity for lighting up our streets in the night.
Devi : Who knows? In future our country may launch artificial moons to light our night time sky!
Malar : I have read some other countries are going to launch these types of illumination satellites near future.
Devi : Superb news! If we launch artificial moons, they can assist in disaster relief by beaming light on areas that lost power!

**குறிப்பு : செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா.**
**உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

ஒரு மொழி பொதுமக்களாலும் அதன் இலக்கியம், புல மக்களாலும் அமையப்பெறும். தமிழ்பொதுமக்கள் உயர்ந்த பகுத்தறிவுடையர். எத்துணையோ ஆராய்ச்சி நடந்துவரும் இக்காலத்திலும் எத்துணையோ மொழிகளினின்று கடன்கொண்ட ஆங்கில மொழியிலும் நூலிலும் இலையைக் குறிக்க Leaf(லீஃப்) என்னும் ஒரேசொல் உள்ளது. ஆங்கில நூல்களிலும் வேறு பல வகைகளில் இலைகளைப் பாகுபாடு செய்தனரேயன்றி, தமிழ்பொதுமக்களைப் போல வன்மை மென்மை பற்றித் தாள், இலை, தோகை, ஓலை எனப் பாகுபாடு செய்தாரில்லை. இத்தகைய பாகுபாடு ஏனைய உறுப்புகளுக்குள்ளும் செய்யப்பட்டது.

தமிழ்நாடு எத்துணைப் பொருள் வளமுடையதென்பது, அதன் விளைபொருள் வகைகளை நோக்கினாலே விளங்கும்.

(i) ஒரு மொழியும், அதன் இலக்கியமும் எவ்வாறு அமையும்?
(ii) இலையின் வேறு பெயர்கள் யாவை?
(iii) தமிழ்மொழியின் தனித்துவமான சொல் பாகுபாட்டை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
(iv) தமிழ்நாட்டின் பொருள் வளத்தினை எவ்விதம் விளங்கிக் கொள்ளலாம்?
(v) இப்பத்திக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்று தருக.

## பகுதி – V (மதிப்பெண்கள் : 24)

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும்.** **3 x 8 = 24**

43. (அ) மலர்ந்தும் மலராத பாதிமலர் போல
வளரும் விழி வண்ணமே - வந்து
விடிந்தும் விடியாத காலைப் பொழுதாக
விளைந்த கலை அன்னமே
நதியில் விளையாடி கொடியில் தலைசீவி
நடந்த இளந் தென்றலே - வளர்
பொதிகை மலைதோன்றி மதுரை நகர் கண்டு
பொலிந்த தமிழ் மன்றமே

- கவிஞர் கண்ணதாசனின் இப்பாடலில் தவழும் காற்றையும் கவிதை நயத்தையும் பாராட்டி உரைசெய்க.

**(அல்லது)**

(ஆ) 'ஜெயகாந்தன் தன்படைப்புகளைத் தனித்தன்மையில் தருபவர்' என்ற கூற்றினை ஆய்வு செய்க.

44. (அ) விருந்தினர் பேணுதல், பசித்தவருக்கு உணவிடல் போன்ற தமிழர் பண்பாடு. இன்றைய சூழலில் உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலையும், பசித்து வந்த ஒருவருக்கு நீங்கள் உணவிட்ட செயலையும் அழகுற விவரிக்கவும்.

**(அல்லது)**

(ஆ) இராமானுசர் நாடகத்தில் வெளிப்படும் மனித நேயத்தை விவரிக்கவும்.

45. (அ) குமரிக் கடல்முனையையும் வேங்கட மலைமுகட்டையும் எல்லையாகக் கொண்ட தென்னவர் திருநாட்டிற்குப் புகழ் தேடித்தந்த பெருமை, தகைசால் தமிழன்னையைச் சாரும். எழில்சேர் கன்னியாய் என்றும் திகழும் அவ்வன்னைக்கு, பிள்ளைத்தமிழ் பேசி, சதகம் சமைத்து, பரணி பாடி, கலம்பகம் கண்டு, உலாவந்து, அந்தாதி கூறி, கோவை யாத்து, அணியாகப் பூட்டி அழகூட்டி அகம்மிக மகிழ்ந்தனர் செந்நாப் புலவர்கள்.
- இக்கருத்தைக் கருவாகக் கொண்டு 'சான்றோர் வளர்த்த தமிழ்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

**(அல்லது)**

(ஆ) 'விசும்பின் துளியும் பசும்புல் தலையும்' என்னும் கருத்தை அடிப்படையாகக் கொண்டு, குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரை ஒன்று எழுதுக.

குறிப்புகள்: முன்னுரை - இயற்கையோடு இயைந்து வாழ்வோம் - வானத்து மழைநீரைப் பூமியில் காப்போம் - மழைக்கு ஆதாரமான மரங்களை வளர்ப்போம் - முடிவுரை.

WTS Success

Wondershare PDFelement

**No of Printed Pages: 4** **Roll No**

# SMART TEACHERS ASSOCIATION & WAY TO SUCCESS
## SSLC MODEL PUBLIC EXAMINATION – 2019-20
## மொழிப்பாடம் - தமிழ்

**கால அளவு : 15 நிமிடம் + 3 மணி** **மொத்த மதிப்பெண்கள் : 100**

**அறிவுரை:** (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப்பதிவாகி உள்ளதா என்று சரிபார்த்துக்கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.
(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கு பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு :** i) இவ்வினாத்தாள் ஐந்து பகுதிகளைக் கொண்டது.
ii) விடைகள் தெளிவாகவும் குறித்த அளவினவாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

### பகுதி – I (மதிப்பெண்கள்: 15)

**i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **15 x 1 = 15**

**ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

1. “அல்லில் ஆயினும் விருந்து வரின் உவக்கும்” என்று விருந்தோம்பல் பண்பு பெண்களுக்கே உரிய சிறந்த பண்பு எனக் குறிப்பிடும் நூல்
   அ) கொன்றை வேந்தன் ஆ) குறுந்தொகை ஆ) நற்றிணை ஈ) திருக்குறள்

2. கடல் தன் நீரலையைத் தடுத்து நிறுத்தி …………………… காக்கிறது
   அ) கப்பலைக் ஆ) சங்கினைக் இ) சிப்பியைக் ஈ) முத்துக்களைக்

3. ‘மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம்வைத்தும்’ என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டுக் குறிப்பு உணர்த்தும் செய்தி
   அ) சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது
   ஆ) காப்பிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது
   இ) பக்தி இலக்கிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது
   ஈ) சங்கம் மருவிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

4. அண்ணன் தம்பி அனைவரிடத்திலும் இன்மொழி பேசினர் - அடிக்கோடிட்டச் சொற்களின் வகையைக் குறிப்பிடுக.
   அ) உம்மைத்தொகை, பண்புத்தொகை ஆ) உம்மைத்தொகை, வினைத்தொகை
   இ) பண்புத்தொகை, வினைத்தொகை ஈ) அன்மொழித்தொகை, வினைத்தொகை

5. “மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்” – வேலவன் குன்றமும் மாலவன் குன்றமும் குறிப்பவை முறையே
   அ) திருப்பதியும் திருத்தணியும் ஆ) திருத்தணியும் திருப்பதியும்
   இ) திருப்பதியும் திருச்செந்தூரும் ஈ) திருப்பரங்குன்றமும் பழனியும்

6. வைகறை என்ற சிறுபொழுது எத்திணைக்குரியது?
   அ) குறிஞ்சி ஆ) முல்லை இ) மருதம் ஈ) நெய்தல்

7. ‘தன் நாட்டு மக்களுக்குத் தந்தையும் தாயும் மகனுமாக இருந்த அரசன்’ என்னும் மெய்க்கீர்த்தித் தொடர் உணர்த்தும் பொருள்
   அ) நெறியோடு நின்று காவல் காப்பவர் ஆ) பண்பட்ட மனிதநேயம் கொண்டவர்
   இ) மேம்பட்ட நிருவாகத்திறன் பெற்றவர் ஈ) மிகுந்த செல்வம் உடையவர்

8. சரியான அகர வரிசையைத் தேர்ந்தெடுக்க
   அ) ஐந்து, ஆலமரம், பாடல், போட்டி ஆ) போட்டி, பாடல், ஐந்து, ஆலமரம்
   இ) ஆலமரம், ஐந்து, பாடல், போட்டி ஈ) பாடல், போட்டி, ஆலமரம், ஐந்து

9. இருவர் உரையாடுவது போன்ற ஓசை உடையது
   அ) தூங்கலோசை ஆ) துள்ளலோசை இ) அகவலோசை ஈ) செப்பலோசை

10. எனக்கு எழுதித் தருகிறாயா? என்ற வினாவுக்கு, எனக்கு யார் எழுதி தருவார்கள்? என்று விடையளிப்பது - இதில் இடம் பெற்றுள்ள வினா மற்றும் விடை வகைகள்
    அ) ஐய வினா, எதிர்வினாதல் விடை ஆ) கொளல் வினா, எதிர்வினாதல் விடை
    இ) ஏவல் வினா, சுட்டு விடை ஈ) ஏவல் வினா, எதிர்வினாதல் விடை

Wondershare PDFelement

11. நட - இவ்வினையடியின் தொழிற்பெயர் விகுதி அல்லாது வந்த சொல்
அ) நடை ஆ) நடத்தல் இ) நடத்த ஈ) நடத்தை

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.**

*வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன்பால்*
*மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்*
*மீளாத் துயர்தரினும் வித்துவக் கோட்டம்மா! நீ*
*ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே.*

12. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல்
அ) திருப்பாவை ஆ) திருவெம்பாவை இ) தேவாரம் ஈ) பெருமாள் திருமொழி

13. இப்பாடலின் ஆசிரியர்
ஆ) ஆண்டாள் ஆ) திருமங்கையாழ்வார் இ) குலசேகராழ்வார் ஈ) நம்மாழ்வார்

14. வித்துவக்கோட்டம்மா! - இலக்கணக் குறிப்பு
அ) உருவகத் தொடர் ஆ) விளித்தொடர் இ) உவமைத்தொடர் ஈ) வினைத்தொகை

15. இப்பாடல் எத்தனையாவது பாசுரமாக இடம்பெற்றுள்ளது?
அ) 591 ஆ) 691 இ) 916 ஈ) 619

## பகுதி – II (மதிப்பெண்கள்: 18)

### பிரிவு – 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.** **4 x 2 = 8**
**21ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்**

16. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.
அ) ஒரு மொழி பொதுமக்களாலும் அதன் இலக்கியம், புலமக்களாலும் அமையப்பெறும்.
ஆ) பாவாணர் உலகத் தமிழ் கழகத்தை நிறுவித் தலைவராக இருந்தவர்.
17. உயிராக காற்று விளங்குகிறது - இக்கூற்றை நிறுவ இரண்டு இலக்கியச் சான்றுகள் தருக.
18. ஒரு மன்னன், பகைவர் இன்றியே தானே கெடுவான் எப்போது என்று வள்ளுவர் குறிப்பிடுகின்றார்?
19. செய்குதம்பிப் பாவலரின் கல்வி பற்றிய கருத்தினை முழக்கத் தொடர்களாக்குக.
20. வறுமையிலும் படிப்பின்மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி. என்பதற்குச் சான்று தருக.
21. **உலகு** – என முடியும் திருக்குறளை எழுதுக.

Wondershare PDFelement

### பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க** **5 x 2 = 10**

22. பின்வரும் சொற்களுக்கேற்ற எதிர்மறையான சொற்களை எழுதுக.
அ) மீளாத்துயர் ஆ) அருகில் அமர்க

23. பழமொழிகளை நிறைவு செய்க.
அ) உப்பில்லாப் ………… ஆ) விருந்தும்…………

24. பின்வரும் தொடர்களில் எழுவாயைச் செழுமை செய்க.
அ) மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும். ஆ) கல்வியே ஒருவருக்கு உயர்வு தரும்.

25. கீழ்க்காணும் சொற்களின் கூட்டப்பெயர்களை கண்டறிந்து எழுதுக.
அ) கல் ஆ) பழம் இ) புல் ஈ) ஆடு

***குறிப்பு : செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா :***
புதுக்கோட்டை, மன்னார்குடி, சைதாப்பேட்டை, புதுச்சேரி ஆகிய ஊர்ப்பெயர்களின் மரூஉவை எழுதுக.

26. தொகாநிலைத்தொடர் என்றால் என்ன? சான்று தருக.

27. பொருத்தமான நிறுத்தற் குறிகளை இடுக.
சென்னை மாநகராட்சியின் சிறப்புக் கூட்டமொன்றை அப்போதைய மாநகரத் தந்தை செங்கல்வராயன் தலைமையில் கூட்டி சென்னை பற்றிய தீர்மானமொன்றை முன்மொழிந்து தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம் என்று முழங்கினேன் தீர்மானம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டமை நடுவணரசை அசைத்தது

28. **அமர்ந்தான்** - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

Wondershare PDFelement

## பகுதி – III (மதிப்பெண்கள்: 18)

### பிரிவு – 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** **2 x 3 = 6**

29. மனிதனால் காற்று எவ்வாறு மாசு அடைவதாகக் கூறுகிறது?
30. போர் அறம் குறித்து சங்க இலக்கியங்கள் கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.
31. **உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

தமிழ்நாடு எத்துணைப் பொருள்வளமுடையதென்பது, அதன் விளைபொருள் வகைகளை நோக்கினாலே விளங்கும். பிறநாடுகளிலுள்ள கூலங்களெல்லாம் சிலவாகவும் சில்வகைப்பட்டனவாகவுமிருக்க, தமிழ்நாட்டிலுள்ளவையோ, பலவாகவும் கழிபல வகைப்பட்டனவாகவும் இருக்கின்றன. எடுத்துக்காட்டாக, கோதுமையை எடுத்துக்கொள்ளின் அதில் சம்பாக் கோதுமை, குண்டுக் கோதுமை, வாற்கோதுமை முதலிய சில வகைகளேயுண்டு. ஆனால், தமிழ்நாட்டு நெல்லிலோ, செந்நெல், வெண்ணெல், கார்நெல் என்றும் சம்பா, மட்டை, கார் என்றும் பல வகைகள் இருப்பதுடன் அவற்றுள் சம்பாவில் மட்டும் ஆவிரச்சம்பா, ஆனைக்கொம்பன் சம்பா, குண்டுச் சம்பா, குதிரைவாலிச் சம்பா, சிறுமணிச் சம்பா, சீரகச் சம்பா முதலிய அறுபது உள்வகைகள் உள்ளன.

அ) தமிழ்நாட்டின் பொருள் வளத்தை எவ்வாறு அறியலாம்?
ஆ) கோதுமையின் வகைகள் சிலவற்றை எழுதுக.
இ) இவ்வுரைப் பத்திக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்று தருக.

### பிரிவு – 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** **2 x 3 = 6**
**34வது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

32. மாளாத காதல் நோயாளன் போல் - இடஞ்சுட்டி பொருள் விளக்குக.
33. ‘முதல் மழை விழுந்ததும்’ என்னவெல்லாம் நிகழ்வதாக கு.ப.ரா. குறிப்பிடுகிறார்?
34. **அடிபிறழாமல் எழுதுக.**

“தூசும் துகிரும்” எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடல் **(அல்லது)**
“விருந்தினனாக ஒருவன்” எனத் தொடங்கும் காசிக்காண்டப்பாடல்

### பிரிவு – 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்** **2 x 3 = 6**

35. முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும் - இக்குறட்பாவில் அமைந்துள்ள பொருள்கோளின் வகையைச் சுட்டி விளக்குக.
36. கரப்பிடும்பை இல்லாரைக் காணின் நிரப்பிடும்மை
எல்லாம் ஒருங்கே கெடும் - இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.
37. தீவக அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

## பகுதி – IV (மதிப்பெண்கள்: 25)

**அனைத்து வினாக்களுக்கு விடையளிக்க.** **5 x 5 = 25**

38. அ) முல்லைப் பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக **(அல்லது)**
ஆ) கருணையனின் தாய் மறைவுக்கு, வீரமாமுனிவர்தம் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க.
39. அ) நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் ‘உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்’ என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி, அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக. **(அல்லது)**
ஆ) உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும், விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்கு கடிதம் எழுதுக.
40. படம் உணர்த்தும் கருத்தை நயமுற ஐந்து தொடர்களில் எழுதுக.



Wondershare PDFelement

41. கண்ணன் என்பவரின் மகன் வளவன் பத்தாம் வகுப்பில் 500க்கு 425 மதிப்பெண்கள் பெற்று மேல்நிலை வகுப்பில் கணிதப் பிரிவில் தமிழ் வழியில் சேர விரும்புகிறார். அவருடைய பிறந்த தேதி 15.05.2004. அவர் தமிழ்ப்பாடத்தில் 88, ஆங்கிலப் பாடத்தில் 78, கணிதப் பாடத்தில் 80, அறிவியல் பாடத்தில் 92, சமூக அறிவியல் பாடத்தில் 86 மதிப்பெண்களும் பெற்றுள்ளார். அவருடைய பத்தாம் வகுப்பு பதிவெண் 5264756. கடந்த 2019 மார்ச் மாதம் அவர் பத்தாம் வகுப்பினை தமிழ் வழியில் படித்து தேர்ச்சி பெற்றுள்ளார். அவருடைய தாயாரின் பெயர் கோமதி. 45, நேரு நகர், திண்டிவனம் என்ற முகவரியில் பெற்றோருடன் வசித்து வருகிறார். தேர்வர் தன்னை வளவனாக பாவித்து இணைக்கப்பட்டுள்ள படிவங்களில் உரிய படிவத்தினை தேர்ந்தெடுத்து நிரப்பவும்.

42. அ) புயல் அறிவிப்பைக் கேட்ட நீங்கள், உங்களையும் உங்கள் குடும்பத்தாரையும் காப்பாற்றும் வகையில் செய்யும் செயல்களை வரிசைப்படுத்தி எழுதுக.

**(அல்லது)**

**மொழி பெயர்க்க.**

ஆ) *Among the five geographical divisions of the Tamil country in Sangam literature, the Marutam region was the fit for cultivation, as it had the most fertile lands. The property of a farmer depended on getting the necessary sunlight, seasonal rains and the fertility of the soil. Among these elements of nature, sunlight was considered indispensable by the ancient Tamils.*

***குறிப்பு: செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா.***
***உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.***

*எந்தவொரு புதிய தொழில்நுட்பமும் ஒரே நாளில் வந்து விடுவதில்லை. 1980களில் ஒவ்வொருவருக்குமான தனிநபர் கணினிகளின் வளர்ச்சியும், இணையப் பயன்பாட்டின் பிறப்பும் இன்றைய மின்னணுப் புரட்சிக்குக் காரணமாயின. அவற்றுள் இவ்வுலகை மிகுதியாக ஆளக்கூடிய ஒரு தொழில்நுட்பம் செயற்கை நுண்ணறிவு. அறையின் மூலையில் நிறுவப்பட்டிருக்கும் கண்காணிப்புக் கருவி அசைவு நிகழும் பக்கம் தன் பார்வையைத் திருப்புகிறதே அதனுள் பொதிந்திருப்பது செயற்கை நுண்ணறிவு. அந்த வழியில் போக்குவரத்து நெரிசல் அதிகம். 'இதுவே சுருக்கமான வழி' என்று நமது திறன்பேசியில் உள்ள வழிகாட்டி வரைபடம் காட்டுகிறதல்லவா? அதற்குக் காரணமாக இருப்பதும் செயற்கை நுண்ணறிவே.*

*i) எந்த ஆண்டு தனிநபர் கணினி உருவாக்கப்பட்டது?*
*ii) செயற்கை நுண்ணறிவு என்றால் என்ன?*
*iii) நமது பயணத்தை எளிதாக்குவது எது?*
*iv) இணையப் பயன்பாடு எப்புரட்சி உருவாகக் காரணமானது?*
*v) இவ்வுரைப்பத்திக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்றைத் தருக.*

## பகுதி – V (மதிப்பெண்கள்: 24)

**அனைத்து வினாக்களுக்கு விடையளிக்க** **3 x 8 = 24**

43. அ) ஒரு குழந்தையைத் தூக்கவும் கீழே விழுந்த ஒரு தேனீர்க் கோப்பையை எடுக்கவும் மென்பொருள் அக்கறை கொள்ளுமா? வெறும் வணிகத்துடன் நின்று விடுமா? இக்கருத்துகளை ஒட்டிச் செயற்கை நுண்ணறிவின் எதிர்கால வெளிப்பாடுகள் பற்றி ஒரு கட்டுரை வரைக.

**(அல்லது)**

ஆ) நிகழ்கலைகளின் எதிர்காலம் சிறப்பாக அமைய உன்னுடைய கருத்துகளை தெளிவாக விவரித்து எழுதுக.

44. அ) அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் 'கோபல்லபுரத்து மக்கள்' கதைப்பகுதி கொண்டு விவரிக்க.

**(அல்லது)**

ஆ) அழகிரிசாமியின் 'ஒருவன் இருக்கிறான்' சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதை மாந்தர்கள் குறித்து எழுதுக.

45. அ) குறிப்பு – நூலின் அமைப்பு – நூலின் மையப் பொருள் – மொழி நடை – வெளிப்படுத்தும் கருத்து – நூலின் நயம் – நூலின் கட்டமைப்பு – சிறப்புக் கூறு – நூல் ஆசிரியர் ஆகிய உட்தலைப்புகளைக் கொண்டு பள்ளி ஆண்டு மலருக்காக, நீங்கள் நூலகத்தில் படித்த கதை / கட்டுரை / சிறுகதை / கவிதை நூலுக்கான மதிப்புரை எழுதுக.

**(அல்லது)**

ஆ) நாட்டு விழாக்கள் – விடுதலைப் போராட்ட வரலாறு – நாட்டின் முன்னேற்றத்தில் மாணவர் பங்கு – குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் 'மாணவப் பருவமும் நாட்டுப் பற்றும்' என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.